# உலகத்தமிழ்


திங்கள் மின்னிதழ்

சனவரி 2023



நாட்டுப்புறக்கலை – பறையாட்டம்





# அட்டைப்பட விளக்கம்...

## பறையாட்டம்...

பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமான நடனங்களில் ஒன்றாகும். இது உணர்ச்சித் ததும்ப ததும்ப நிகழ்த்தப்படுவது. அதிர்ந்தெழும் பறையின் ஓசைக்கேற்ப ஆடக்கூடியது என்பதால் பறையாட்டம் கிளர்ந்தெழுகின்ற எழுச்சி மிகுந்த உடல் அசைவுகளைக் கொண்டது.

ஆதிமனிதச் சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும் தங்கள் குழுவுக்கு ஆபத்துகளை உணர்த்தவும் விலங்குகளிடம் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக் கொண்ட சத்தம்தான் பறையாட்டத்தின் மூலம் எனக் கருதப்படுகிறது.

ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி, கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது இது. பறை என்ற இசைக்கருவியை இசைத்து ஆடப்படுவதால் இந்த ஆட்டம் பறையாட்டம் என அழைக்கப்படுகிறது. இது ஒரு போர் இசைக்கருவியாகும். போர்ப்பறை என்றும் அழைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் இக்கலைஞர்கள் அதிக அளவில் வாழ்கிறார்கள். கோயில் சார்ந்த நிகழ்ச்சிகளிலும் வாழ்க்கை சார்ந்த சடங்குகளிலும் அரசியல் பிரச்சாரங்களிலும் இக்கலை நிகழ்த்தப்படுகின்றது. ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்ட இக்கலையினை தற்போது பெண்களும் ஆடி வருகின்றனர்.





மலர் – 3 | இதழ் – 5 | சனவரி 2023

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின்

# உலகத்தமிழ்

## திங்கள் மின்னிதழ்

**ஆசிரியர்**

முனைவர் **ப.அன்புச்செழியன்**
இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**துணை ஆசிரியர்கள்**

முனைவர் **சு.சோமசுந்தரி**
ஆய்வறிஞர்

திருமதி **ஐ.ஜான்சிராணி**
ஆய்வு வளமையர்

**செய்தி ஆசிரியர்**

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்

**இதழ் வடிவமைப்பு**

திருமதி **பெ.செல்வராணி**
கணினி செயல்முறையாளர்

தொடர்புக்கு

0452–2530766/2530799

utsmdu2@gmail.com

Uts Mdu

@TamilUlaga

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அட்டைப்பட ஓவியம்**

ஓவியர் **அ.கண்ணன்,** மதுரை

**முகவரி**

**இயக்குநர்,**
**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை – 625 020.

அன்புள்ள நண்பர்களே!

வணக்கம்,

உலகளவில் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி தமிழின் வளர்ச்சிக்கு உதவியாகவும் உள்ளது. அவற்றிற்குப் பங்கம் விளைவிப்பதாகவும் உள்ளது. அலைபேசியின் பயன்பாடு, தொலைக்காட்சிகளின் குறுக்கீடு, திரைப்படங்களின் வளர்ச்சி எனப் பல்வேறு விசயங்கள் இளைய தலைமுறையினரைத் திசைமாற்றிவிடும் தன்மையுடையதாக மாறியுள்ளன. அவற்றையெல்லாம் ஓரங்கட்டித் தங்களுக்கான குறிக்கோளை நோக்கிப் பயணப்படுபவர்களுக்கு மட்டுமே வெற்றி சாத்தியப்படும். வாசிப்புத் திறனும் நூலகங்களின் பயன்பாடும் குறைந்துள்ளது ஈண்டு கவனிக்கத்தக்கது. இனிவரும் சந்ததியினர் அதனை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும். தொழில்நுட்ப வளர்ச்சியால் கையடக்க அலைபேசியிலும் உலகிலுள்ள செய்திகளை அறியவும் நூல்களை வாசிக்கவும் முடிகிறது. ஆனால், அவ்வாறு பயன்படுத்தாமல் பொழுதுபோக்கிற்காக மட்டுமே அலைபேசியைப் பயன்படுத்துவது பெருகியுள்ளது.

மிகுதியாகத் தனிமனிதப் பண்பும் ஒழுக்கமும் போதிக்கப்படவேண்டும். தனிமனித அறமும் சமுதாய அறமும் வலியுறுத்தப்படவேண்டும். மனிதனிடம் நல்ல பண்புகளும் ஒழுக்கமும் அறமும் பெருகும்போது குற்றங்கள் குறையும். இதனால் குடும்ப நலனும் சமுதாய நலனும் மேம்படும். இந்தச் சனவரித் திங்களிதழை வாசித்தும் பகிர்ந்தும் மகிழ்வீர். 2023ஆம் ஆண்டுப் புத்தாண்டில் அறங்களும் மனிதநேயமும் வளர்ந்து ஒளிமிகுந்த சமுதாயம் மலர எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

முனைவர் ப.அன்புச்செழியன்
ஆசிரியர்

# உள்ளே

1. குறுந்தொகையும் சமூகவியலும் (பகுதி – 2) – 5
2. கவித்துளிகள் – 7
3. மணிமேகலை உ.வே.சா.பதிப்பு (பகுதி – 2) – 8
4. துளிர்க்கும் சருகுகள்... – 11
5. பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும் இலக்கிய நயமும் (தொடர்ச்சி) – 12
6. திருவிளையாடல் (படலம் – 1) – 14
7. வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம் – 15
8. மொழிபெயர்ப்புக் கவிதை – 18
9. சங்கச்சுவடுகள் – 19
10. மகான்!.. காந்தி மகான்! – 21
11. தெய்வம் என்பதோர்... – 22
12. தை மகளே வா..! – 27
13. பொய்மையும் வாய்மையுடைத்து (சிறுகதை) – 28
14. திங்களும்... சிறப்பும்... – 31
15. தடம்... – 35
16. இலக்கியப் பேழை – 36
17. அறிவிப்பு – 38

# குறுந்தொகையும் சமூகவியலும்

## (பாலைத்திணைப் பாடல்களை முன்வைத்து)

பகுதி–2

முனைவர் **ப.சு.மூவேந்தன்**
அண்ணாமலை நகர்

### இன்பியல் வாழ்க்கை

இன்பம் என்பது எல்லாத்துறையிலும் எய்தும் மனமகிழ்ச்சி என்பர். அது அகத்திணையில் சிறப்புப் பற்றிக் காம இன்பத்தையே குறித்து வருகின்றது. காம இன்பம் குறித்த நுகர்ச்சியின் பெருமை சங்கப் பாடல்களின் பொருளாக அமைந்திருக்கக் காணலாம். இன்பம் என்பது அனைத்து உயிர்க்கும் உரியதாயினும், மனித இனம் பெறும் இன்பமே சிறப்புடையதாகக் கருதப்பெறும். உயிரின் இயற்கைப் பண்பாகிய இன்ப நுகர்வினைப் பெறுவதற்கு மனிதச் சமூகம் சில கட்டுப்பாடுகளை அமைத்துக் கொண்டது.

இதனால் சங்கச் சமூகத்தில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் தலைமை சான்ற சமூகவியற் பண்புகளாக விளங்கியமை புலனாகும். இவற்றுள்ளும் அறமே ஏனைய எல்லாவற்றினும் உயிர்மூலமாகக் கருதப் பெற்றது. இவ்அறமே சமூக வளர்ச்சிக்கும் ஒழுங்கமைவுக்கும் துணையாக நின்றது.

சமூக வாழ்வியலில் காதலுணர்வு மிக இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. சமூகவாழ்வியலின் எல்லாக் காலங்களிலும்



காதல் சிக்கலுக்குரிய ஒன்றாகவே அமைந்துள்ளதனைத் தமிழ்ச்சமூகப் பரப்பில் காணமுடியும். எனினும் சங்க இலக்கியங்கள் காட்டும் காதல் குறிக்கோள் நெறியினைக் கொண்டதாகவும் ஏனைய சமூகங்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக அமைந்ததும் ஆகும். தலைவி மீது தலைவன் கொண்டுள்ள காதலுணர்வு,

**"................... நல்மா மேனி**
**புனற் புணை அன்ன சாய்இறைப் பணைத்தோள்**
**மணத்தலும் தணத்தலும் இலமே;**
**பிரியின் வாழ்தல் அதனினும் இலமே"**
**– (குறு.168)**

என்னும் பாடலில் சுட்டப்படுகின்றது. தான் தலைவியைப் பிரிந்தால் அவள் மேனியின் எழில்நலம் வாடும்; அவளது தோள்கள் மெலியும் அத்தகு தன்மைகளைக் கொண்ட தலைவியைப் பிரிந்து வாழ்தல் இயலாத ஒன்று என்பதனைத் தலைவன் உணர்த்தக் காணலாம்.

''சமூக வாழ்வு மனிதனுக்கு ஓர் ஒழுங்கமைவைக் கற்பிக்கிறது. அது மனிதனுக்குள் உண்டாகும் குழப்பமான, வேண்டா எழுச்சிமிக்க, சமூக அமைப்பிற்கு மாறுபாடான உணர்வுகளைத் தடுக்கிறது. உறுதிப் பொருள்களை உணர்ந்து கொள்வதற்கு ஓர் ஒழுங்குமிக்க சமுதாயம் முற்றிலும் இன்றியமையாததாகும்'' என்றுரைப்பர் சமூகவியலாளர்.

நல்லதோர் சமூக அமைப்பிலேயே அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் தெளிவாகும். சங்கச் சமூகத்தில் இவற்றைக் குறித்த தெளிவான கருத்துகள் நிலவியிருந்தமை புலனாகும்.

## சமூக வாழ்வில் காதல் உணர்வு

சமூகம் உறவுகளால் இடையறவுபடாமல் நீடித்துச் செல்வதற்கு உயிரினங்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் செலுத்திக் கொள்ளும் அன்புறவே அடிப்படையாக அமைகின்றது. இத்தகு அன்புறவே சங்கப் பாடல்களில் அன்பின் ஐந்திணை எனப்பட்டது. பாலைத்திணைப் பாடல்கள் அன்புறவு கொண்ட காதலர்களின் வாழ்வியல் தொடர்ச்சியை, இல்வாழ்க்கையின் இணைவினை உடன்போக்கு மேற்கொண்டாயினும் தன் காதலை நிறைவேற்றிக் கொள்ளும் பாங்கினை,

**"ஊர்அலர் எழ, சேரி கல்லென**
**ஆனாது அலைக்கும் அறன்இல் அன்னை**
**தானே இருக்க, தன்மனை; யானே**
**நெல்லிதின்ற முள்எயிறு தயங்க**
**உணல் ஆழ்ந்திசினால் அவரொடு"**

**– (குறு. 262:1–5)**

என்னும் பாடல் காட்டுகின்றது. உடன்போக்கினை மனநிறைவுடன் ஏற்றுக்கொள்ளும் தலைவியின் நிலையினை இப்பாடலில் காணலாம்.

## ஒழுக்கமும் கற்பும்

மனிதன் பின்பற்றி நடக்கும் ஒழுக்கவிதிகள், இரக்கம், ஒப்புரவு, ஈகை முதலான மனிதப் பண்புகள் குடும்பம், சமூகம், அரசு ஆகிய சமூக அமைப்புகள் குலையாது இருப்பதற்குத் துணை நின்றுள்ளன. இவ்வாறான ஒழுக்க விதிகள்,

♦ ஒருவன் பின்பற்றி நடக்கும் ஒழுக்கமே அவனது குடிமைக்கு அடையாளம் ஆகும்.

♦ ஒழுக்கமே அறத்திற்கு வித்தாகும்.

♦ ஒழுக்கமுடையார் தீயவற்றைச் செய்யவும் சொல்லவும் மாட்டார்.


♦ ஒழுக்கத்தைப் பின்பற்றி நடப்பவரே உயர்ந்தவர்.

என்பனவாகச் சங்க காலத்தில் கட்டமைக்கப் பட்டிருந்தன. மனம், சொல், செயல் ஆகியன ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. தனிமனிதத் தூய்மையும் குடும்பத் தூய்மையும் ஒழுக்க விதிகளுக்குள் அடக்கப்பட்டன. ■


கவித்துளிகள்
– ராஜா செல்லமுத்து


"இருளில் பூத்த
ஒளிப் பூ.."


பறவை
அறியாது...
பயணம்


"எதை
விதைக்கிறோமோ
அதை
அறுவடை செய்யலாம்....
தை வழிகாட்டும்..."


SUNDAY
MONDAY
TUESDAY
WEDNESDAY
THURSDAY
FRIDAY
SATURDAY
பெரியார்
படக் காலண்டரை
வடக்குத் திசை பார்த்து
வைக்கச் சொல்பவன் தான்,
இங்கு பகுத்தறிவாளன்
1st New Year's Day
26th Republic Day


"கட்டளைகள்
பத்தும்....
கடைப்பிடித்தால்,
கர்த்தர்
என்றும்
நம்மோடு இருப்பார்"

# மணிமேகலை உ.வே.சா. பதிப்பு

பகுதி–2

முனைவர் **கதி.முருகேசன் (கதிர்முருகு)**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி,



### இரண்டாம் பதிப்பு

முதல் பதிப்பைப் பலவகையில் முயன்று வெளிக்கொணர்ந்த உ. வே. சா. வின் அரிதான முயற்சி அத்துடன் நின்றுவிடாமல் கூடுதல் செய்திகளை அறியும் முயற்சியின் பயனாக இரண்டாம் பதிப்புக்குத் தேவையான முயற்சிகளை மேற்கொண்ட காலத்துக்கிடைத்த பிரதிகள் மற்றும் இரண்டாம் பதிப்பில் செய்யப்பட்ட மாற்றங்களை “இரண்டாம் பதிப்புக்கு உதவியாக மதுரைத் தமிழ்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலைப் பிரதியொன்றும் சென்னை ஸ்ரீ பார்சுவநாத நயினாரவர்கள் பிரதியொன்றும் கிடைத்தன. முதற் பதிப்பில் தனித்தனியே பதிப்பிக்கப்பெற்றிருந்த அபிதான விளக்கம், அரும்பத அகராதி, அருந்தொடரகராதி மூல விஷய சூசிகை அரும்பதவுரையில் அடங்கியவை, தமிழ் நூல் பெயர்கள் முதலியன என்றும் பகுதிகள் ஒருங்கே தொகுக்கப்பெற்று ஒரே அகராதியாக அரும்பத முதலியவற்றின் அகராதி என்னும் பெயருடன் பதிப்பிக்கப் பெற்றன. மூலம் முதலியவற்றிற் காணப்பட்டு முன்பு பதிப்பிக்கப்படாமலிருந்த அரும்பதங்களும் அருந்தொடர்களும் சிலவற்றின் பொருளும் உவமைகளும் பழைய செய்திகளும் வழக்கங்களும் பிறவும் இவ்வகராதியிற் சேர்க்கப்பெற்றன”[8] என்றவாறு பதிவு செய்துள்ளார். மூன்றாம் பதிப்பில் பெரிதாக மாற்றம் ஏதும் இல்லை எனினும் இப்பதிப்பில் முந்தைய பதிப்புகளில் விளக்கப்படாமல் இருந்த சில பகுதிகளுக்கான விளக்கமும் புதிய மேற்கோள்களும் மணிமேகலையைப் படிப்பதற்கு எழுதப்பட்ட புத்த சரிதம், பௌத்த தருமம் பௌத்த சங்கம் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

### சீத்தலைச் சாத்தனார் வரலாறு

சிலப்பதிகாரக் காப்பியம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததுடன் பௌத்த சமயக் கொள்கைகளை விளக்கி மணிமேகலைக் காப்பியத்தைப் படைத்தவர் சீத்தலைச்சாத்தனார். “பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவன் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக் கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்து நித்திய பூசை முதலியன நடக்கச் செய்தவர். அவ்வரசனுக்குக்

கண்ணகியின் வரலாற்றைக் கூறிய பொழுது அவனோடு கேட்டுக்கொண்டிருந்தவரும் அவன் சகோ தரரும் துறவு பூண்டவருமாகிய இளங்கோவடி கள் அவருடைய சரித்திரத்தைப் பொருள் தொடர்நிலைச் செய்யுளாகச் செய்தற்கு வேட்கையடையும் வண்ணம் செய்தவர் இவரே; அச்சிலப்பதிகாரத்தைக் கேட்டாரும் இவரே"[9] என்று உ. வே. சா. சீத்தலைச் சாத்தனார் சிலம்பு தோன்றக் காரணமாக இருந்ததைப் பதிவு செய்கிறார்.

சீத்தலைச்சாத்தனாரின் பெயர் தொடங்கி மணிமேகலைக் காப்பியத்தில் அவர் காட்டியிருக்கும் சிறந்த பண்புகள் பலவற்றையும் வெளிக்கொணரும் பாங்கில் உ.வே.சா ஒருங்கே விளக்கியிருப்பது கருதத்தக்கது. "சீத்தலைச் சாத்தனார் தண்டமிச் சாத்தன், தண்டமிழாசான், நன்னூற் புலவன்"[10] என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டமையை அறிய முடிகிறது. தமிழ் மொழியின்பால் பற்றுக் கொண்ட சாத்தனார் தமிழ்க் கவிகளை அரங்கேற்றம் செய்பவர்கள் கவியில் செய்த தவறுகளுக்காக, தன்னைத் தானே நொந்து கொண்டு தனக்குத்தானே தண்டனை கொடுத்துக்கொள்ளும் சிறப்புடையார் என்பதை உ.வே.சா. பின்வருமாறு விளக்குகிறார். "சங்கத்தில் அரங்கேற்றுவித்தற் பொருட்டு வரும் நூல்களிற் பிழைகள் காணப்படுந்தோறும் ஆக்கியோர்களைக் குற்றம் கூறுதற்குத் துணியாராய் இந்தப் பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே என்று மனம் வருந்தித் தமது தலையைக் குத்திக்கொள்வாரென்றும் அதனால் தலை புண்பட்டுச் சீலோடி இருந்தமையின் சீத்தலைச் சாத்தனாரென்று இவருக்குப் பெயராயிற்றென்றும் கூறுவர்."[10]

சாத்தனார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர். இவர் சீத்தலைச் சாத்தனாருடன் நெருங்கிய நல்லுறவு பூண்டவராக விளங்கினார். அதற்கான சான்று, "அகநானூற்றிலும் புறநானூற்றிலும் திருவள்ளுவ மாலையிலும் இவருடைய செய்யுளும் மருத்துவன் தாமோதரனார் செய்யுளும் அடுத்தடுத்துக் காணப்படுவதாலும் தாமோதரனார் இவரைப்பற்றிக் கூறியிருத்தலாலும் இவ்விருவரும் நெருங்கிய நட்பினரென்று கருத இடமுண்டு"[11] என்றவாறு அமைகிறது.


திருக்குறளில் ஈடுபாடும் புலமையும் கொண்டவராகச் சீத்தலைச் சாத்தனார் விளங்கியமையினை உ.வே.சா பல்வேறு சான்றுகளின் வழியாக விளக்கியுள்ளார். "இவர் (சீத்தலைச்சாத்தனார்) திருக்குறளில் மிக ஈடுபட்டவரென்பது அந்நூலை இவர் சிறப்பித்துப் பாடிய திருவள்ளுவமாலைச் செய்யுளாலும் மருத்துவன் தாமோதரனார் அம்முப்பாலால் இவர் தலைக்குத்துத் தீர்த்தாரெனச் சொல்வதால் இந்நூலில் இவர் தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன்

பொருளுறை தேறாய் (22: 59 – 61) எனத் திருக்குறட் செய்யுளொன்றை மேற்கோள் காட்டித் திருவள்ளுவரைப் பாராட்டியிருத்த லாலும் கேள்வியால் தோட்கப்படாத செவி' என்னும் குறட் பகுதியை நினைத்து 'கேள்வியாளரிற்' றோட்ட செவியை நீயாகுவை '(15: 134 – 135)'[12] என்பதனாலும் பிறவற்றாலும் அறியக் கிடக்கின்றது.

சாத்தனார் வினைக் கொள்கையில் உறுதி உடையவர் என்பதை உ.வே.சா. விளக்கியுள்ளார். கோவலனுக்கு வினைவிளை காலமாதலின் அவன் வினைவழிக் கொல்லப்பட்டான். அவ்வாறே உதயகுமாரன் முற்பிறவியில் தான் செய்த வினையின் வழியே, அவ்வினை தொடரப் பாம்பு தீண்டியும் வெட்டுப்பட்டும் இறந்தான் என்பதை உணரும் வண்ணம் சாத்தனார் வழி நின்று உ.வே.சா.விளக்கியுள்ளார்.

இவர் (சீத்தலைச்சாத்தனார்) கண்ணகியைப் பற்றிய வரலாற்றை இளங்கோவடிகளுக்குக் கூறுகையில், "வினைவிளை காலமாதலின் பாண்டியன் தேரானாகிக் கோவலனைக் கொல்லுமாறு கட்டளையிட்டான் என்று மெல்ல இளங்கோவடிகள் வினைவிளை காலமென்றீர் யாது அவர் வினை விளைவு ? என்று கேட்க, இவர், தாம் மதுரையில் வெள்ளியம்பலத்திற் பள்ளிகொண்டிருக்கையில் மதுராபதியென்னும் தெய்வம் கண்ணகிக்கு முற்பிறப்பின் வரலாற்றைக் கூறிக் கோவலன் கொலையுண்டது பண்டை வினையின் பயனென்றறிவுறுத்தியதைக் கேட்டவாறு கூறினாரென்பதும் அதனைக்கேட்ட இளங்கோ வடிகளால் மூன்று உண்மைகளைப் புலப்படுத்திச் சிலப்பதிகாரம் இயற்றப்பெற்றதென்றும் அந்நூலால் தெரிகின்றன. இவ்வரலாற்றினால் சாத்தனார் எந்த நிகழ்ச்சியும் பண்டை வினையின் பயனாக விளைவதெனும் கொள்கையுடையராதல் வேண்டும். அக்கொள்கையை இந்நூற் கண் பல வகையில் புலப்படுத்தியிருக்கின்றன. உதயகுமாரன் காஞ்சனனென்னும் விஞ்சையனால் வெட்டுண்ட செய்தியைச் சக்கரவாளக் கோட்டத்து மாதவர் அரசனுக்குக் கூறும் பொழுது ஆங்கவன் தீவினை உருத்ததாகலின் அஃது அவன் தன்னை அம்பலத்தேற்றி இவனை ஆங்குய்த்து விஞ்சையனைக் கூஉய் அவன் மனத்தையும் கலக்கி இவன்றன்னை அறிந்தது' (மேலது. 22: 193 – 203) என்று அச்செய்கையை வினையின் மேலேற்றிச் சொல்லும் பகுதியாலும் 'மடையனை உற்றுளி செய்தாங்குருத்தெழும் வல்வினை நஞ்சுவிழி யரவினல்லுயிர் வாங்கி விஞ்சையன் வாளால் வீட்டியதன்றே' (23: 82 – 5) 'காண்டகு நலினை நும்மையீங் கழைத்து' (24: 98) என்பன போன்ற பகுதிகளாலும் இதனை அறியலாகும்'[13]

தொடரும்...


துளிர்க்கும் சருகுகள்...
தான்
தானாகவே
இருக்க அறிவதே
உலகில்
பெரிய விசயம்
– மாந்தேன்
தன்னைத்தானே
ஆட்சி
செலுத்தாதவர்களை
மற்றவர்கள்
ஆட்சி செய்வார்கள்
– இக்பால்
மன்னித்தலிலும்
ஆற்றல் மிக்க
ஆயுதமில்லை
– குரு நானக்
எவ்வகைத் தானத்திலும்
பிரிந்தாரைச்
சேர்த்து வைத்தல்
பெருந்தானமாகும்
– முகம்மது நபி
நல்ல
நினைவுகளைப்
பயிர் செய்து
வளர்த்து வா
– புத்தர்
அறிவுரை...

மனோன்மணியம் சுந்தரனாரின் பார்வையில்

# பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும், இலக்கிய நயமும்



முனைவர் **சு.மோதிலால் நேரு***
திருவனந்தபுரம்

## ஆற்றுப்படை பாடல்கள்

பத்துப்பாட்டின் காலம் நக்கீரர் ஒருவரின் காலத்தைச் சார்ந்தது அல்ல. இதன் ஆசிரியர்கள் பலரும் நக்கீரர் காலத்தில் வாழ்ந்திருக்கலாம். இந்த நூலின் பாடல்கள் எழுதப்பட்டிருக்கும் முறையை வைத்து இந்த நூல் இவரது பிற்கால நூல் என்று கூறலாம். இது நக்கீரர் காலத்தில் ஆற்றுப்படை முறையில் எழுதப்பட்ட இறுதி நூலாகக் கருதலாம். இதன் அடிப்படையில் இந்தப் பத்துப்பாட்டு கிறித்து பிறந்த நூற்றாண்டில் உருவாகி இருக்கலாம் என்று தீர்மானிக்கலாம். இனி இந்தப் பத்துப்பாடல்களைப் பற்றிப் பார்ப்போம்.

இந்தப் பத்துப்பாடலில் ஐந்து பாடல்களின் நடையையும் முறையையும் வைத்துப் பார்க்கும் பொழுது இதை ஆற்றுப்படைப் பாடல் என்று கூறலாம். அதாவது ஆற்றுப்படை என்றால் "ஒருவரிடம் பொருள் பெற்று திரும்புகின்ற கலைஞர், அவ்வழியே செல்லும் தன்னைப் போன்ற கலைஞர்களிடம் அந்த வள்ளலின் கொடை, குணம், வீரம், அவரது அந்தஸ்து மற்றும் பல சிறப்புக் குணங்களைப் போற்றிப் பாடி அவர்களை ஆற்றுப்படுத்தி, வேண்டியதைப் பெறுவதற்கு வழி கூறுவதே இந்த ஆற்றுப்படை".

இந்த ஐந்து பாடல்களில் நான்கும் இந்த மேல் கூறிய விதிகளுக்கு உட்பட்டது. ஆனால், திருமுருகாற்றுப்படை என்ற தலைப்பைக் கொண்ட பாடல் மட்டும், முருகக்கடவுளைக் குறிப்பதாக உள்ளது. இந்த ஆற்றுப்படுத்துதல் மூலம் முருகக்கடவுளைப் போற்றி வணங்கி, அவர் அருளைப் பெறுங்கள் என்று இறை நம்பிக்கையுடையவர்களிடம் கூறும் பாடலாக உள்ளது.

பத்துப்பாட்டு சொற்சுவையும் பொருட் செறிவும் மிக்கது. இந்தப் பாடல் அலங்கார வார்த்தைகளால் ஜோடிக்கப்பட்டு அதன் உண்மையான பொருளை உணர்வது சற்றுக் கடினமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்த நடை இதன் ஏகதேச காலத்தை அறிவதற்கு உதவியாக இருக்கிறது. நக்கீரர் இந்தப் பாடலைப் படைக்கும் பொழுது இந்தப் பாடலில் உள்ள செய்திகள் கால ஆராய்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று ஒருக்காலும்

நினைத்திருக்கமாட்டார். அவருக்கு இது போன்ற பாடல்களின் முன்மாதிரி அதிகமாக கிடைத்திருக்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும் குறிப்பிடத்தக்க சில நல்ல முன்மாதிரிகளின் அடிப்படையில் இதை எழுதியிருக்கிறார். இந்த ஐந்து பாடல்களில் நான்கும் சிற்றின்பம் சார்ந்தன. அதாவது 5, 7, 8 மற்றும் 9 பாடல்கள். ஆறாவது பாடலான மதுரைக்காஞ்சி உலக வாழ்க்கைக் கும் அப்பாற்பட்ட மறு உலக வாழ்க்கையைக் குறிக்கிறது.

எல்லாப் பாடல்களிலும் மேற்கூறிய கருத்து மட்டுமே முக்கியக் கருத்தாகவோ அல்லது நோக்கமாகவோ இல்லை. இந்தப் பாடல்கள் அவர்களின் கற்பனை கலந்த, இயற்கைச் சூழ்நிலையில் அவர்கள் விவரித்துக் கூறும் விளக்கங்களும் உவமைகளும் நமது மனத்திரையில் கொண்டுவரும் விதமாக இருக்கின்றன. முதலாவதாகக் கூறப்படும் இந்தத் திருமுருகாற்றுப்படை நிச்சயமாக மிகச் சிறந்த பாடல் என்று கூறமுடியாது என்றாலும் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த ஆற்றுப்படைப் பாடல் என்று கருதலாம்.

மதுரையில் தமிழ்ச் சங்கம் அழிந்த போது பல சிறந்த நூல்களும் அழிந்துவிட்டன. மேலும், பல தகுதியான போட்டியாளர்கள் இருந்தபோதும் முருகன் என்ற பெயர் இந்த நூலின் தகுதியற்ற மறைவில் இருந்து தப்புவதற்கு உதவியிருக்கலாம். நக்கீரரின் மற்றைய 9 படைப்புகளில் ஒன்று சைவத் திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறையில் ஒன்றாக உள்ளது. இது முருகபக்தர்களின் தினசரி வழிபாட்டுப் பாடல்களில் ஒன்றாகும்.

## திருமுருகாற்றுப்படையில் மலைவாழ் மக்களின் சிறப்பு நிலை

இன்றும் முழுமையாக மறைந்து விடாத பழங்குடியினரின் சில விசித்திரமான பழக்க வழக்கங்களைக் காணலாம். மலை கிராமங்களின் முச்சந்தியில் பெரிய மரங்களின் கீழே அமர்ந்து அந்தக் கிராமத்தின் பெரியவர்கள் பல தீர்மானங்களை எடுக்கும் இடத்தில், இவர்கள் இறைவனுக்குத் தங்கள் உடமைகளை, குறிப்பாக மிருகங்களைப் பலி கொடுத்தும் சாமி ஆடி குறி சொல்வது குறித்தும் மேய்ச்சல் நிலங்களில் நடப்பட்டுள்ள கல்தூண்களில், அங்குள்ள மாடுகள் தங்கள் உடம்பை உரசிக்கொள்வது குறித்தும் அந்த இதமான இயற்கைச் சூழ்நிலையைக் கூறியும் அந்தப் போர்க் கடவுளைச் சந்திப்பதற்கான சாதகமான சூழ்நிலைகளாக விவரிக்கப் படுகின்றன.

அவர்கள் தங்கள் உடமைகளைப் பலி கொடுக்கும் விதத்தை மிக அருமையாக விரித்துக் கூறி இருக்கிறார்கள். இன்றும் நகரத்திற்கு அப்பால், தொலைவில் அமைந்துள்ள பழமையான மலைப் பிரதேசங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் காண்பது அரிதல்ல. இந்த நிகழ்ச்சி நடக்கும் இடத்தைக் குறித்து வெகு சிறப்பாக விவரித்துக் கூறுகிறார்.

■ தொடரும்...

# இந்திரன் பழி தீர்த்த படலம்




திருவிளையாடல் புராணம் நூலில் மதுரைக்காண்டத்தின் முதல் படலம் ‘இந்திரன் பழி தீர்த்த படலம்’ ஆகும்.

தென்னாடுடைய சிவபெருமான், இந்திரன் பெற்ற சாபத்தினை நீக்கியதையும் இந்திரன், மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு இந்திர விமானம் அமைத்துக் கொடுத்தது பற்றியும் இப்படலம் விளக்குகின்றது.

கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் முக்கியத்துவத்தையும் மீனாட்சியம்மன் கோயிலின் சித்திரா பௌர்ணமி வழிபாட்டின் பலன்கள் பற்றியும் இப்படலத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.



திரு. தங்கராஜு பாண்டியன்
ஓவிய ஆசிரியர், மதுரை

# வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம்



முனைவர் **மு.ரா.மஜிதா பர்வின்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

## பகுதி–2

உணவுக்கு உப்புப் போல உரைக்கும் சொல்லும் வெல்லும் சொல்லாக இருக்க வேண்டும். உப்புக் கூடினால் உணவு உட்கொள்ள முடியாததுபோல் அளவற்று அளவளாவினால் வெல்லும் சொல் கொல்லும் சொல்லாகிவிடும். சிந்தித்துப் பேசுங்கள். பேசியபின் சிந்திப்பது நிந்தனைக்குள்ளாகி விடும்.

தாவூது நபி அவர்கள் இரும்பு வளையங்கள் செய்து ஒன்று சேர்ப்பதைக் கண்டு வியந்த அறிஞர் லுக்மான் அதுபற்றிக் கேட்கத் துடித்த நாவை அடக்கி அமைதியாய் அமர்ந்திருந்தார். வேலை முடிந்து எழுந்த தாவூத் நபி இரும்புச் சட்டையை அணிந்து காட்டி அச்சட்டை, போரில் கவசமாகப் பயன்படுவதைச் சொன்னார்கள். அவசரப்பட்டு கேள்வி கேட்டு தாவூத் நபியின் வேலையைக் கெடுக்காமல் அமைதியாய் அமர்ந்து பதிலைப் பெற்ற அறிஞர் லுக்மான் “மௌனம் அறிவு சான்ற செயல்” என்றார். அதிகமான செல்வம் குற்றம் புரியத் தூண்டும். அதிகப் பேச்சு பொய்யுரைத்துப் புறங்கூறும். பிறர் பேச்சைக் குறை கூறுவோர் அவர்களின் பேச்சிலும் குறையுண்டு என்று உணர வேண்டும்.

“மற்றவர் பேச்சைக் கேலி செய்வதிலும் கேடு வேறொன்றுமில்லை” என்கிறார். ஆபூதர்தா (ரலி) அவர்கள் மாட்டின் பற்களுக்கிடையில் சிக்கிக் கொள்ளும் வைக்கோல் போல நாவடக்கமில்லாரின் பற்களுக்கிடையில் பாவச் சொற்கள் சிக்கிக் கொள்கின்றன. நகைச் சுவையிலும் நாகரிக நயமிருப்பது நாவடக்கம். நகைச்சுவையால் பிறரைப் புண்படுத்துவது நாவின் பாவம். நாவினால் உருவாகும் பெரும்பாவம் பொய்யுரைப்பது. உமர் இப்னு அப்துல் அஜிஸ் உடை உடுத்தத் தொடங்கிய நாளிலிருந்து பொய் பேசியதில்லை என்று ஏடுகள் சான்று பகர்கின்றன. நச்சுப் பாம்புக்கு இரண்டு நாக்குகள் உள்ளன. இங்கொன்றும் அங்கொன்றும் பேசுவோரை இரட்டை நாக்கினர் என்று கூறுவதன் உட்பொருள் அவர்கள் நச்சுப் பாம்புகள் என்பதே.

பாராட்டு நாவால் நவில்வது. அப்பாராட்டுத் தூங்கிக் கிடப்பவனைத்

துடித்தெழுப்பும். சோம்பிக் கிடப்பவனைச் செயல் வீரனாக்கும். துணிவற்றவனுக்குத் துணிவைக் கொடுக்கும். இருளில் தடுமாறி ஒடி ஒளிபவனுக்கு ஒளியைக் காட்டி வழியை உருவாக்கி வாகை சூட வைக்கும். ஒரு சமுதாயத்தின் போக்கையே மாற்றி இலக்கை நோக்கிச் செலுத்தும். அப்பாராட்டுரையானது நாவடக்கத்தோடு நவிலும் பொழுதுதான் சாதனைகள் நிகழ்கிறது. நாவடக்கமின்றி மதியில்லாதவனை அறிஞன் என்றும் உழைப்புக்குரிய கூலியைக் கொடுக்காதவனைக் கொடைவள்ளல் என்றும் கோழையை வீரன் என்றும் பாராட்டினால் அது ஆபத்தில் முடியும்; பாவத்தில் விடியும். பாராட்டுபவனும் ஒளி கொடுத்து அழியும் மெழுகுவர்த்தி போல் பரிதாபமாய் அழிவான்; பாராட்டப்படுபவனும் இல்லாத பெருமையால் பொல்லாதன செய்து வெல்லும் வழியின்றி வெந்து மடிவான்.

"நபியே! நீங்கள் மனிதர்களை மதிநுட்பத்துடனும் அழகிய நல்லுரைகளாலும் உங்கள் இறைவன் வழியில் அழைப்பீராக! அன்றி அவர்களுடன் விவாதிக்க நேரிட்டால் நீங்கள் கண்ணியமான அழகிய முறையில் விவாதம் புரியுங்கள்" என்று எழில்மறை குர்ஆனின் 16–125ஆவது வசனம் வாய்மை தவறாத நபி(ஸல்) அவர்களுக்கு நாவடக்கத்துடன் நல்லுரை நல்கவும் விவாதம் புரியவும் உலக மக்களும் நாவடக்கம் பேணி, பாவத்தை முடக்கி நல்லன செய்து அவனியில் வாழ வழிகாட்டுகிறது.

இவ்வுலகில் நாம் வாழும் போது நமது நாவைத் தீமையிலிருந்து காத்தால் அது நம்மைச் சோகத்தில் இருந்து காக்கக் கூடியதாக இருக்கிறது. 'நுணலுந் தன் வாயால் கெடும்', 'சொல்லிவிட்ட வார்த்தைக்கு நாம் அடிமை', 'சொல்லாத வார்த்தை நமக்கு அடிமை', 'பல்லக்கு ஏறுவது நாவாலே பல்லு உடைவதும் நாவாலே' என்பன முதலான பழமொழிகள் மனிதனுக்கு நாவினால் ஏற்படக் கூடிய விளைவுகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

ஒவ்வொரு மனிதனும் தனது நாவை இரண்டு வகையாகக் கட்டுப்படுத்த வேண்டும். முதலாவது தேவையானவற்றை மட்டுமே பேச வேண்டும். இதனால் அவனது உடல் மட்டுமல்ல; உள்ளமும் பாதுகாப்பாக இருக்கும். இரண்டாவது உணவை உண்ணக் கூடிய விசயத்தில் அவன் தன் நாவைக் கட்டுப்படுத்தவேண்டும். நாவிற்குச் சுவையாக இருப்பதையெல்லாம் அளவிற்கு அதிகமாகச் சாப்பிடாமல் இருந்தால் உடலும் உள்ளமும் நலமாக இருக்கும்.

நமக்குத் தெரிந்த உரிய மனிதர்களை மட்டுமே நம் வீட்டு வாயிலுக்குள் வர அனுமதிப்பதைப் போல உரிய பேச்சுகளை

மட்டுமே நாம் பேச வேண்டும். அதனால்தான் இரண்டிற்குமே அதாவது வீட்டினுடைய வாயிலுக்கும் மனிதனுடைய வாய்க்கும் வாயில் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"ஒரு மனிதன் தன் நாவைக் காப்பவனாக இருக்கவில்லை என்றால் அது அல்லாத வேறு எதனையும் அவன் காப்பவனாக இருக்க முடியாது" என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். நாம் பேசக்கூடிய பேச்சு 8 இலக்கணங்கள் பொருந்தியதாக இருக்க வேண்டும்.

1. உண்மை – உண்மையே பேச வேண்டும்; பொய் பேசக் கூடாது.

2. நன்மை – நன்மையானதையே பேச வேண்டும்; தீமையானது பேசக் கூடாது.

3. அன்பு – எல்லோரிடமும் அன்பாகப் பேச வேண்டும்; வெறுப்போடு பேசக் கூடாது.

4. நிதானம் – எதையும் நிதானமாகப் பேச வேண்டும்; அவசரமாகப் பேசக் கூடாது.

5. இனிமை – இனிமையாகப் பேச வேண்டும்; கடுப்போடு பேசக் கூடாது.

6. ஆழம் – கருத்தாழம் உள்ளதையே பேச வேண்டும்; கருத்தற்ற பேச்சுகளைப் பேசக் கூடாது.

7. சமயம் – நேரம் அறிந்து பேச வேண்டும்; எல்லா நேரத்திலும் எல்லாவற்றையும் பேசக் கூடாது.

8. சபை – சபை அறிந்து பேச வேண்டும்; எல்லாச் சபைகளிலும் எல்லாவற்றையும் பேசக் கூடாது.

ஆகிய எட்டு இலக்கணங்கள் பொருந்தியதாக இருக்க வேண்டும். 'பேசாத பேச்சுக்கு நீ எஜமான்; பேசிய பேச்சுகள் உனக்கு எஜமான்' என்று ஒரு பழமொழி உண்டு. நமது வாயில், பேச்சுகள் எவ்வாறு உருவாகிறது என்றால், நமது குரல்வளை 'பெட்டி' போன்ற அமைப்பு கொண்டது. அதனுடைய உட்புறச் சுவர் பல தசை நார்களால் பின்னப்பட்டுள்ளது. இவற்றினுடைய அசைவுகளால் தான் நமது வாயில் பேச்சுகள் பிறக்கின்றன. மனிதனுடைய குரல்வளை, வயிறு, நெஞ்சு, வாய், நாக்கு, உதடு முதலான 44 உறுப்புகளினுடைய உதவியினால் தான் ஒரு மனிதன் பேசுகின்றான்.

நாவைக் காக்க முப்பத்து இரண்டு காவலாளிகள் இருப்பது போதாதா ? இன்னும் வேறு எத்தனை காவலாளிகள் போட்டுக் காக்க வேண்டும் ? நானூறு காவலாளிகள் போட்டாலும் போதாது. நாம்தான் அதை அடக்கி வைக்க வேண்டும். 'பகலில் பக்கம் பார்த்துப் பேசணும்; இரவில் அதுவும் பேசக் கூடாது' என்றொரு பழமொழி உண்டு.

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"**

என்ற வள்ளுவரின் வாய்மொழியை மதியாமல் வாங்கிக் கட்டிக் கொண்ட கதைகள் பல உண்டு.

■ தொடரும்...

# ‘நம்பிக்கை’ என்பது இறகுகளுடன் கூடிய ஒன்று

‘நம்பிக்கை’ என்பது இறகுகளுடன் கூடிய ஒன்று
அது ஆன்மாவில் குந்துகிறது
மேலும் சொற்களின்றிப் பண்ணிசைக்கிறது
ஒருபோதும் அதை நிறுத்துவதில்லை

மற்றும், அது தித்திப்பானது – கடுங்காற்றிலும் கேட்கக்கூடியது
மேலும், வெம்புண்ணாய் வேதனை தருவது புயலே
அது, வெதுவெதுப்பில் இருக்கும் சிறு பறவைகளை
கலக்கமடையச் செய்யும்

கடுங்குளிர் நிலையில் அதை நான் கேட்டிருக்கிறேன்
மற்றும் விசித்திரமான கடல் மீதும்.
இன்னும் – உச்சநிலையில்
ஒருபோதும் அது, என் மென்மையான உட்பகுதியின்
சிறு துணுக்கைக் கூடக் கேட்டதில்லை..

## ‘Hope’ is the thing with feathers

'Hope' is the thing with feathers
That perches in the soul --
And sings the tune without the words --
and never stops --at all

And sweetest-- in the Gale --is heard--
And sore must be storm --
That could abash the little Bird
That kept so many warm --

I've heard it in the chillest land --
And on the strangest sea --
Yet - never - in Extremity,
It asked a crumb - of me

By
Emily Dickinson



– சந்திரா மனோகரன்

# அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்களின் செயல்பாடுகள்

தமிழ்மாமணி முனைவர்
**தாழை இரா.உதயநேசன்**
நிறுவனர்,
அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக்
குழுமங்கள், அமெரிக்கா.



## அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை

2021 ஆகஸ்ட் 15 விடுதலை நாள் அன்று இணையத்தினூடாக உலகத்தில் உள்ள தமிழ்ச் சான்றோர்களை வைத்துத் தொடங்கப்பட்டது. இதன் மூலமாக உலகத் தமிழர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதமாகவும் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கிலும் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருகிறது. இப்பேரவை மூலமாக நடத்திய நிகழ்வுகளை வகைப்படுத்திக் கொண்டு பல்வேறு குழுக்களாகப் பிரித்து அதற்கென்று நிருவாக இயக்குநர்களை உருவாக்கித் தற்பொழுது பத்திற்கும் மேற்பட்ட குழுக்களுடன் எவ்விதப் பாகுபாடு இல்லாமல் எந்தவிதத் தேக்கமும் காணாமல் பேரவை சிறப்பாகச் செயல்படுகிறது.

அதாவது, 'கலை உதயம் பதிப்பகம்', 'அமெரிக்க முத்தமிழ் சிறுவர் பேரவை' (11.12.2021), 'அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூ பேரவை' (02.01.2022), 'அமெரிக்க முத்தமிழ் நூல் ஆய்வுப் பேரவை', 'அமெரிக்க முத்தமிழ்த் தொலைக்காட்சி', 'முத்தமிழ் நேசன் இலக்கிய இதழ்', 'அமெரிக்க முத்தமிழ் ஆசிரியர் பேரவை', 'அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்', 'கல்வாரி இந்தியா மிஷன்' ஆகிய அமைப்புகளைத் தொடங்கி அதற்கென தனித்துவமான செயல்பாடுகளைச் செய்து வருகிறது.

அண்மையில் 2022 நவம்பர் 5, 6 அன்று திருச்சி மலைக்கோட்டை கலைக்கோட்டையாக மாற்றியது அமெரிக்க முத்தமிழ்ப் பேரவைக் குழுமங்களின் முதலாமாண்டு விழா இதில் பல்வேறு ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் நல்லாசிரியர் விருதுகளையும் முத்தமிழ்த் தொலைக்காட்சி விருதுகளையும் ஹைக்கூ கவிஞர்களுக்கான விருதுகளையும் சிறுவர்களுக்கான விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தது.

## அமெரிக்கா முத்தமிழ்த் தொலைக்காட்சி

அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை என்ற முகநூல் குழுமம் தொடங்கப்பட்டது. மேலும், அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூ பேரவை, அமெரிக்க முத்தமிழ் ஆசிரியர் பேரவை, அமெரிக்க முத்தமிழ் சிறுவர் பேரவை, அமெரிக்க முத்தமிழ் நேசன் என்ற

பத்திரிகையைத் தொடங்கி இருக்கின்றது. இந்தப் பேரவைகள் எல்லாம் தொடர்ந்து இயங்குவதற்கு அமெரிக்க முத்தமிழ் இணையத் தொலைக்காட்சியும் தொடங்க வேண்டிய தேவை இருந்ததால், இந்தத் தொலைக்காட்சியைத் தொடங்கிப் பல்வேறு இலக்கிய, இலக்கண, கலை சார்ந்த நிகழ்வுகளைப் பேரவை நடத்தி வருகின்றது. அதாவது, திங்கள் தோறும் மரபு இலக்கணப் பயிற்சி, புதன் கிழமையில் ஏணிப்படிகள் என்ற நேர்காணல் நிகழ்ச்சி, வியாழன் தோறும் சர்வதேசக் கவியரங்கம், சனிக்கிழமை நூலாய்வு நிகழ்ச்சி, ஞாயிற்றுக் கிழமையில் பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகிறது.









**நிறுவனர்**

தமிழ்மாமணி முனைவர்

**தாழை இரா.உதயநேசன்**


**தொடர்புக்கு :**

**அமெரிக்க முத்தமிழ்**

**இலக்கியப் பேரவைக் குழுமங்கள்**

6643, லோகஸ்ட் குரோவ் டிரைவ்,

இண்டியானாபொலீஸ்,

இண்டியானா 46237, அமெரிக்கா.

**மின்னஞ்சல் முகவரி**

www.americamutamiluniversity.org

**தொடர்புக்கு**

9159698466, 9976025731.

பதிவு எண்: 20220106155484З/9275709

**தமிழக முகவரி:**

எண்:10.முதல் தெரு,

ஸ்ரீ ராமாபுரம், ஆம்பூர் –635802,

திருப்பத்தூர் மாவட்டம்.

# மகான்!... காந்தி மகான்!

–முனைவர் **சு.முத்துஇலக்குமி**, மதுரை

காந்திஜியின் சகாப்த அகிம்சை, சத்திய சாதனைகளைத் தொடக்க காலத்தில் பதிவு செய்தன பேசும் திரைப்படங்கள். இதில் நாம் இருவர் திரைப்படத்தில் இடம்பெறும்

**"மகான்!... காந்தி மகான்"**

என்ற பாடல், தேசபக்திப் பாடல்களை அன்றைய காலத்தில் தம் இசையால் வசப்படுத்திய மிகச் சிலருள் திருமதி.பட்டம்மாள் ஒருவர். அவரது இயை கான ஓசையும் குமாரி கமலாவின் அழகிய நடனமும் ஒவ்வொர் ஆண்டும் காந்தி ஜெயந்தி நிகழ்வின் போது அக்டோபர் 2ஆம் நாள் அன்று கட்டாயம் மக்கட் தொடர்புச் சாதனங்கள் வழி குறிப்பாகத் தொலைக்காட்சி நிகழ்வுகள் வழி காணவும் கேட்கவும் சுவைக்கவும் இயலும்!

ஆண்டுதோறும் காந்திஜெயந்தி விழாவில் காந்திஜியின் தனித்துவச் சிறப்புகளைப் பேசுகிறோம், எழுதுகிறோம், பார்க்கிறோம், கேட்கிறோம், நினைத்துச் செயல்படுகிறோமா? இங்கு தான் வினாவிற்கான விடையைத் தேட வேண்டியுள்ளது!

ஆஹா!... நாம் காந்தி வழியில் எங்ஙனம் பயணித்தோம், இன்று பயணிக்கிறோமா! இனி எங்ஙனம் தொடரவேண்டும் என்பதை உற்று நோக்கும் பொழுது நம்மை நாம் 'புடம் போட்டு' ஒவ்வொருவரும் தனித்தனியே காந்திஜியின் கூறினை ஏதாவது ஒன்றில் ஏற்று வாணாள் முழுவதும் வாழ்ந்திட முயற்சித்து வென்றால் அது நாம் காந்தியப் பணியின் தடத்தில் பதிவு பெற்றவர்கள் ஆவோம்!

காந்திய சிந்தனைக்கான இலக்கியக் களங்கள், நிர்மாணப் பணிகள், சுதேசி இயக்கங்கள்... எனப் பட்டியல் நீண்டு செல்லும்! எனக்குப் பிடித்த காந்திய இலக்கியக் களத்தில் என்னை இணைத்துக் கொண்டு புத்தகவாசிப்பு, நேசிப்பு, திறனாய்வு பகிர்வு, படைப்பு என்று ஒரு தளத்தில் நின்றால் அது நம் வாழ்வின் 'இலக்கு' என்பது புலனாகிவிடும்!

தேடல் உள்ள மனிதனுக்குத் தான் வாழ்க்கையில் பசியும் ருசியும் இருக்கும் என்பது இக்காலக் கவிஞனின் வாக்கு. வாழ்க்கை நமக்கானது தான்! அதில் நம்மால் எல்லோருக்கும் ஆனதாக வாழ்ந்திட எத்தனிக்க வேண்டும். அதற்குச் சான்று நம் அண்ணல் காந்திஜி, கஸ்தூர்பாவும் தான் முதற்சான்று! முக்கியமான சான்று!

"உலகில் 162 நாடுகளில் மனிதர்களின் சுதந்திரம் பற்றிய தரக் குறியீட்டு அளவில் இந்தியா 112ஆவது இடத்தில் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகப் பத்திரிகைகள் சுதந்திரக் குறியீட்டிலும் 180 நாடுகளில் நம் நாடு 42ஆவது இடத்தில் உள்ளது" என்பதே பத்திரிகைச் செய்தி!

ஆக, நாம் இருக்கும் நாடு நமது நாடு, இதன் நிலைப்பாடு இத்தன்மைத்து என்பதை உணர்ந்து 'காந்தி மகானின்' காந்தப்புலத்தில் நம்மைச் சிந்தனையாலும் செயலாலும் இணைத்து வாழ முற்படுவோம்! வெற்றிகொள்வோம்!

## நூல் திறனாய்வு

# தெய்வம் என்பதோர்...
(கட்டுரைத் தொகுப்பு)




தொன்மங்கள் தொடங்கித் தமிழ்ப் பண்பாடுகள் வரை பேசக்கூடியவர் தொ.பரமசிவன். சிறு தெய்வங்கள், சீரிய வழிபாடு, மக்கள் நம்பிக்கைகள், மன ஆறுதல்கள் எனப் பலவற்றைத் தொடர்ந்து எழுதக்கூடியவர். ஆன்மிக ஆணிவேரையும் அசைத்துப் பார்த்தவர். பண்பாடுகள் குறித்து எழுதிப் பல்வேறு தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். அவரின் தொகுப்புகளில் ஒன்று 'தெய்வம் என்பதோர்...' என்பதாகும்.

நவராத்திரி விழா என்பது பெருதெய்வ வழிபாடாகப் பெருவாரியான வீடுகளில் கொண்டாடப்படுவது வழக்கமாகும். கொலு வைத்து மக்கள் கொண்டாடுவர். தொ.பரமசிவன் 'தாய்த் தெய்வம்' கட்டுரையில் ஒன்பது நாள்கள் தவம் செய்யும் அம்மன் பத்தாம் நாள் ஓர் அரக்கனைக் கொன்று திரும்புவதான ஓர் அம்மனைப் பற்றிப் பேசுகிறார். இது சிறுதெய்வமாக உள்ளது. ஆண் துணையின்றி இருக்கும் அம்மன்களே இவ்வாறு கொல்கின்றனர் என்கிறார். இவ்வாறான கோயில்களில் பார்ப்பனர்கள் வழிபாடு செய்யப்படுவதில்லை என்பதையும் தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டுத் தெய்வம் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் இருந்து கிடைக்கின்றன என்னும் செய்தி தொ.ப.வின் கட்டுரைகள் மூலம் கிடைக்கின்றன. வைதீகத்தின் சாயல் தாய் தெய்வத்தின் மீது



## பொன்.குமார்

சேலம்

**தலைப்பு : தெய்வம் என்பதோர்...**
**வகை : கட்டுரை**
**ஆசிரியர் : தொ.பரமசிவன்**
**வெளியீடு : மணி பதிப்பகம்**

காணப்பட்டாலும் வைதீகத்தால் தாய் தெய்வத்தை அழித்து விட முடியவில்லை என்பதையும் தெரிவித்துள்ளார். பல்லவர், பாண்டியர், சோழர் காலத்திலும் தாய் தெய்வங்கள் இருந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டுள்ளார். தாய்த் தெய்வ வழிபாட்டின் மூல வடிவமான யோனித் தெய்வ வழிபாடு இன்றுமுள்ளது குறித்து வியந்துள்ளார். தமிழ் நாட்டில் பல தாய்த் தெய்வங்கள் உள்ளதைப் பட்டியலிட்டு மானிடப் பெண்ணாக வாழ்ந்து மறைந்தவர்களே பெண் தெய்வங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'உலகம்மன்' என்னும் தலைப்பிலான கட்டுரையில் இன்னொரு தாய்த் தெய்வம் குறித்து விவரித்துள்ளார். பெண்கள் அம்மை நோயினால் இறந்திருந்தால் அவர்கள் மாரியம்மனாகத் திருநிலைப்படுத்துவது மரபு என்று தெரிவித்துச் சமயபுரம் மாரியம்மனே சோழப் பெருந்தேவியின் பள்ளிப்படை என்று ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்து உள்ளார். பள்ளிப்படை என்பது சமாதி. சுமங்கலியாக இறக்கும் பெண்கள் மாலையம்மனாக திருநிலைப்படுத்தி வணங்கப்படுவர் என்கிறார்.

பொய்யாக அழுவதை நீலிக் கண்ணீர் வடிப்பதாகக் கூறுவர். அந்த நீலி யார்?, நீலிக் கண்ணீர் என்று ஏன் பெயர் வந்தது? எனப் 'பழையனூர் நீலி கதை' கட்டுரை மூலம் விளக்கியுள்ளார். உமாபதி சிவாச்சாரியாரின் சேக்கிழார் புராணத்தில் நீலியின் கதை எழுத்து மரபில் உள்ளது என்கிறார். கணவனைப் பலி வாங்கிய நீலி தெய்வமாக்கப்படவில்லை என்று ஒரு விமர்சனத்தையும் வைத்துள்ளார். ஆனால், இசக்கியம்மனுடன் சேர்க்கப்பட்டுக் கதைப் பாடலாக உள்ளது என்கிறார்.

முருகனுக்கு இரண்டு மனைவி என்பதைப் பற்றிப் பேசவில்லை. முருகனுக்கு முதல் மனைவி வள்ளியே என்பதை 'வள்ளி' கட்டுரை மூலம் சான்றுகளுடன் பேசியுள்ளார். பார்ப்பனிய மேலாண்மைக்கு உட்பட்ட முருகனைச் சண்முகன் என்றாக்கி இந்திரன் மகளை மனைவியாக்கியுள்ளனர் என்கிறார். தமிழ் நாட்டார் பாடல்களில் வேலனும் வள்ளியுமே பாடப்பட்டுள்ளனர் என்கிறார்.

பாடல்கள் பலவையும் சான்றாகத் தந்துள்ளார். 'வரலாற்று நோக்கில் முருக வழிபாடு' என்பது முருகன் தொடர்பான மற்றொரு கட்டுரை. பதினெட்டாம் நூற்றாண்டு இறுதிக்குள் முருகன் கோயில்களில் வழிபாடு

செய்யும் உரிமையைப் பண்டார இன மக்களிடமிருந்து பார்ப்பனர்கள் முழுமையாகப் பறித்துக் கொண்டனர் என்கிறார்.

'சித்திரக் குப்தன்' என்றொரு கட்டுரை. எமலோகத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் இறப்பு கணக்கெழுதும் சித்திரக் குப்தனே அனைவரும் அறிந்தவராவார். தேனி, திருச்செந்தூர் பகுதிகளில் சித்திரக் குப்தனுக்கு கோவிலும் சன்னதியும் உள்ளது என்றும் நாட்டார் கதைப் பாடலிலும் சித்திரக் குப்தனைப் பற்றிய தகவல் உள்ளது என்றும் கூறியுள்ளார். வடபுலத்திலிருந்து வந்த தெய்வம் என்றும் நியாயக் கணக்குப் பார்க்கும் தெய்வமாகப் பண்பு மாற்றம் பெற்றுள்ளது என்கிறார்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஆயிரம் சமணர்களைக் கழுவேற்றிக் கொன்ற போதும் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சமணம் உயிருடன் இருந்தது என்னும் ஒரு வரலாற்று செய்தியைக் கூறித் தற்போது நெல்லையில் சிங்கிக் குளத்தில் ஒரு சமணக் கோயில் பகவதி அம்மன் கோயிலாக்கப்பட்டுள்ளது என்கிறார். இக்கட்டுரையின் தலைப்பு 'ஒரு சமணக் கோவில்'. அரசர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் அடுத்தவர் வழிபாட்டிடத்தை இடிக்கும் வேளையில் சனநாயக உணர்வுள்ள மக்கள் அவ்வாறு செய்வதில்லை என்பதே இதன் செய்தி என்கிறார். வரலாறு என்று கருதப்பட்ட நிகழ்வுகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படுத்தப் படுகின்றன என்பதையும் கட்டுரை தெரிவிக்கிறது.

'தமிழக ஆன்மிக வரலாற்றில் வள்ளலார்' பங்கு என்னவென்றும் விளக்கியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆன்மிக வரலாற்றில் ஒரு கலகக் குரலை எழுப்பியவர் வள்ளலார் என்கிறார். சிதம்பரம் தில்லைக் கோவிலின் மீது வள்ளலாருக்கு இருந்த ஈடுபாடே வடலூரில் ஒரு சபையை நிறுவியதற்குக் காரணமாகும். அதன் பெயர் உத்தர ஞானச் சிதம்பரம். கோயில் என்று கூறாமல் சபை என்றழைக்கப்பட்டது. பசிப்பிணி நீக்கும் செயல் ஆன்மிக வரலாற்றில் ஒரு புதுமையெனப் போற்றியுள்ளார்.

சைவம் என்ற எல்லையைத் தாண்டிச் சமரசம் என்னும் பெருவழியில் பிரவேசித்தவர் என்பது முக்கியமானது.

கண்ணன் என்னும் கடவுளைப் பற்றிய கட்டுரை 'ஆழ்வார் பாடல்களும் கண்ணன் பாட்டும்'. பாரதியார் இயற்றிய கண்ணன் பாட்டில் தொன்மையான வேர்கள் உண்டு என்கிறார். பாரதியார் கண்ணனைப் பாடியதற்குக் காரணம் அரசியல் தளத்தில் ஒரு அதிகார மையத்தினை அழித்துச் சனநாயக உணர்வுகள் ஓங்க வேண்டும் என்பதாகும் என்கிறார். கண்ணனைப் பெரும் தெய்வமாகக் காட்டிய பாசுரங்கள் மிக எளியவனாகவும் காட்டியுள்ளன என்கிறார்.

ஆரியர், திராவிடர் என இருவகையான பண்பாட்டுக் கலப்புகள் குறித்து ஆண்டாளின் முயற்சியை உரையாடியுள்ளார். பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் என்றும் ஒரு வைணவ இலக்கியப் படைப் பாளியின் மகள் என்றும் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

பார்ப்பனரல்லாதவர்களை இணைத்துக் கொண்டால்தான் வைணவச் சமயம் வாழமுடியுமென்று முடிவிற்கு வந்த வரலாற்று பின்னணியில் ஆண்டாளுக்கும் ஓரிடமுண்டு என்பதை அவரின் பாசுரங்களே காட்டுகின்றன என்கிறார்.

பார்ப்பன வருகைக்கு முன் திருமணம் செய்து கொண்டவர்களுக்குக் காப்பறுத்த சாதியாரே சடங்கியல் தலைவராக, புரோகிதராக இருந்துள்ளனர் என்னும் வரலாற்று உண்மையைத் தெரிவித்துள்ளார். அதற்கான சான்றுகளையும் தந்துள்ளார். இவர்களின் சமூக உரிமைகளைப் பார்ப்பனியம் எவ்வாறு பறித்துக் கொண்டது என்பதைக் கள ஆய்வு செய்து எழுதப்பட வேண்டும் என்னும் ஓர் ஆலோசனையையும் தெரிவித்துள்ளார். இக்கட்டுரையின் தலைப்பு ‘சடங்கியல் தலைமையும் சமூக அதிகாரமும்’.

“மரபும் மீறலும் – சாதி சமய அரசியல் பின்னணி’யிலும் இனம் குறித்தே பேசியுள்ளார். இனங்களை மீறிய தனிநபர் கிடையாது என்கிறார். மீறினால் நந்தன் போல நேரடி வன்முறைக்கு ஆளாக நேரிடும் என்கிறார். மீறலால் தமிழ்நாட்டில் நடந்த மோதல்களைக் குறிப்பிட்டுள்ளார். தலித்தியர்கள் உரிமைக் குரல் ஆன்மீகத் தேட்டத்திற்காக அல்லாமல் மரபு வழிச் சமூக அதிகாரத்தைக் கட்டுடைப்பாக மாறுவதை மற்றவர்களால் தாங்கிக் கொள்ள முடியாததே காரணம் என்கிறார். இச்சூழலில் மீறலும் மோதலும் தவிர்க்கமுடியாதவை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தொ.பரமசிவன் பெரியார் கொள்கையைப் பின்பற்றுபவர். பெரியார் பெருந் தெய்வங்களை மறுத்தார். சிறுதெய்வங்களை மறுக்கவில்லை. ‘பெரியாரியலும் நாட்டார் தெய்வங்களும்’ கட்டுரையில் பெரியாரை ஏற்றுக் கொண்டவர்கள் நாட்டார் தெய்வங்களை எப்படிக் கொண்டாட முடிகிறது என்பதற்கான ஒரு நீண்ட விளக்கத்தை அளித்துள்ளார். நாட்டார் தெய்வங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இடையில் புரோகிதர் இல்லை என்பதும் நாட்டார் தெய்வங்கள் நிறுவனச் சார்பற்றவை மக்களுக்குப் பாதுகாப்பு தருபவை என்பதும் காரணங்கள் என்கிறார்.

அதிகார மையமாகிய கோயில்களையும் அதனை மையப்படுத்திய மனித ஏற்றத்தாழ்வுகளையுமே பெரியார் எதிர்த்தார் என்று தெளிவுப்படுத்தி யுள்ளார். ‘சமய நல்லிணக்கம் – பெரியாரியப் பார்வையில்’ என்ன

சொல்கிறது என்றும் ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். பெரியார் இந்து என்னும் சொல்லுக்குச் சரியான வரைவிலக்கணத்தைத் தர வேண்டும் என்று குறிப்பிட்டதாகக் கூறியுள்ளார்.

'இந்தியத் தேசிய உருவாக்கத்தில் பார்ப்பனியத்தின் பங்கு' இத்தொகுப்பில் ஒரு முக்கியமான கட்டுரையாக உள்ளது. 1800களின் தொடக்கத்தில் காலனி அரசாங்கம் ஒரு முழுமையான அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

உள்நாட்டு நீதிமுறைகளைச் சர் வில்லியம்ஸ் ஜோன்ஸ் தொகுத்து இந்து சட்டம் எனப் பெயரிட்டார் என்றும் கிருத்துவர்கள், இசுலாமியர்கள் அல்லாத பெருந்திரளான மக்களைக் குறிக்க ஐரோப்பியர் வழங்கிய இந்து என்னும் சொல் முதன் முதலாக அதிகார அங்கீகாரம் பெற்றது என்றும் தெரிவித்துள்ளார். இந்து என்னும் சொல்லைத் தமிழ்நாட்டுச் சைவர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர் என்கிறார்.

இந்து என்னும் சொல் எந்தவொரு சமயத்தையும் குறிப்பதாகாது என்றும் இந்துவில் சைவம், வைணவம், லிங்காதயம், ஸ்மார்த்தம் என்று பல பிரிவுகள் உள்ளன என்பதை 1924ஆம் ஆண்டு டிசம்பர் செந்தமிழ்ச் செல்வி என்னும் இதழில் வந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தொகுப்பில் ஒரு வித்தியாசமான கட்டுரை 'பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பக்தி இலக்கிய ஆய்வுகள்'. அவரின் ஆய்வுகள் குறித்து விளக்கியதுடன் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளார். பக்தி இலக்கிய ஆய்வுகள் மிக மிகக் குறைவே என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒரு வெற்றிடமாகவே உள்ளது என்கிறார்.

தொ.பரமசிவன் ஓர் ஆய்வாளர். ஆய்வின் அடிப்படையிலேயே அவரின் கட்டுரைகள் இருந்தாலும் பெரும்பாலானவை ஆய்வுக்குரியவை, ஆய்வுக்குட்படுத்த வேண்டியவை என்கிறார்.

மக்களின் பழக்க வழக்கங்களை முதன்மைப் படுத்தியுள்ளார். மூடப் பழக்கம் என்றாலும் மக்களின் நம்பிக்கைகள் என்கிறார். சிறு தெய்வ வழிபாடு செய்பவர்களுக்கும் நாட்டார் தெய்வங்களை வணங்குபவர்களுக்கும் ஆதரவாகக் குரல் கொடுத்ததுடன் அல்லாமல் பார்ப்பனியர்களுக்கு எதிராகவும் தொ.பரமசிவன் குரல் ஒலித்துள்ளது. பார்ப்பனியம் தமிழ் நாட்டில் ஒரு சாதாரண மனிதரைப் போல் நுழைந்து இன்று அசுரபலத்துடன் அமர்ந்துள்ளது என்கிறார். பார்ப்பனியத்தை பெரியார் வழியில் நின்று விரட்டப்பட வேண்டும் என்பது தொ.பரமசிவத்தின் கொள்கையாக உள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். தொ. பரமசிவன் தொடரப்பட வேண்டியவர்.

# தை மகளே வா..!

பொதிகை வளர்
மதுரை தவழ்
மல்கு புகழ்
இனிமை தரும்
இளமை மிகு
விழுப்ப முடை
கனிவு படை
கமழ் கவிகள்
கவின் கலைகள்
பலவு மீயும்
நன்மொழியாம்
பொன் மொழியை

அகமகிழ
வாயார
வாழ்த்தி
செவி குளிர்ந்து
சிந்தை குளிர்வோம்!
தமிழ்த்தாயின்
தலை மகளாம்
தை மகளைக்
கை கொட்டி
புதுப் பொலிவுடன்
பொங்கலிட்டே
வாழ்க வையகம்!– என
வாழ்த்தி வரவேற்போம்...



–கவிஞர் ச.செந்தில் குமார்

# பொய்மையும் வாய்மையுடைத்து!

‘தான் உண்மையிலேயே நன்றாகத்தான் வரைகிறோம்’ என்கிற எண்ணத்தை உருவாக்கினார்.

தொடர்ச்சி...

புதுமைத்தேனீ
மா.அன்பழகன்
சிங்கப்பூர்



மகனை ஒருமுறை அலுவலகத்திற்கு வரச் சொல்லியிருந்தார். முன்கூட்டியே இந்தத் தாய் தன் பணத்தை என் போன்றவர்களிடம் கொடுத்து வைத்துவிட்டார். அவன் கண்முன் பேரம் பேசி ஓவியத்தை வாங்கச் செய்து அவனை நம்ப வைத்தார். இதையெல்லாம் குடும்பத்தாரிடம் சொல்லக் கூடாது என்று எனக்கிட்ட ஆணையை இன்று மீறுகிறேன். அம்மா மன்னிக்கவும்! சொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது! இந்த இடத்தில் ‘உண்மையும் நன்மை உடைத்து’ என்று மாற்றி யோசிக்கிறேன்.

என் மகன் வரையும் ஓவியம் நன்றாக இருக்கின்றதா? அப்படி இருக்கிறதென்றால் அவனை ஏன் YICCA போட்டிக்கு அனுப்பக் கூடாதென்று லாசாலே கல்லூரி நிருவாகத்திடம், மகனுக்குத் தெரியாமல் சென்று இந்த அன்னை முறையிட்டார். அதற்கு அவர்கள், ‘குணாவின் ஓவியம் நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இவ்வளவு செலவு செய்து அனுப்ப வேண்டுமா என்று நிருவாகம் யோசிக்கிறது’ என்று சொன்னவுடன் ‘நான் அந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்கிறேன்’ என்று மகனுக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்தார்.

நண்பர்களே! அவர் நடத்திய நாடகத்தைப் பாருங்கள்!

ஒருநாள் குணா தன் தாயிடம் வந்து, “இளையர் YICCA எனும் International Contest for Contemporary Art போட்டி இம்முறை ஹாங்காங்கில் நடக்கப்போவுதாம்.. என்னை மட்டும் எங்கள் லாசாலே சார்பில் போட்டியிடத் தேர்ந்தெடுத்துள்ளதாகச் சொன்னாங்க” என்று பெருமையாகச் சொன்னான். இந்த அன்னை அப்போது நடிகையர் திலகம் சாவித்திரிபோல் நடித்துக்கொண்டு,

“அப்படியா குணா? ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா!”

“எப்போ போகணுமாம்?”

“போட்டி மே மாதம் முதல் வாரத்தில. ரெண்டு நாளைக்கு முன்னாடியே போகணுமாம். செலவெல்லாம் எங்க காலேஜே செஞ்சிடும், போயி ஜெயிக்கணுமே!?”

“குணா! ஏன் உனக்குச் சந்தேகம்?.... பாரு! நீதான் ஜெயிக்கப்போறே!”

“இல்லம்மா. இந்தப் போட்டியில என்னப்போல வேறவேற நாடுகளிலிருந்து 47பேர் கலந்துக்கப் போறாங்களாம்”

“எத்தனைபேர் கலந்துகிட்டா என்ன ? நீதான் ஜெயிப்பே!” என்று ஊக்க வார்த்தைகளைச் சொல்லிக் கட்டியணைத்து உச்சிமோந்து அனுப்பி வைத்தாள்.

அன்று மாலை தொலைபேசியில் எங்கள் நிறுவனத்தின் பி.ஆர்.ஓ மூலம் இந்த அன்னையை அழைத்து, ‘சிறந்த அன்னை’யாக உங்களை இவ்வாண்டு தேர்ந்தெடுத்துக் கொண்டாட இருக்கிறோம். அன்று குடும்பத்துடன் வரவேண்டும் என்று சொன்னோம்.

செய்தியைக் கேட்டதும் இந்தத் தாய்க்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால், இந்த நேரத்தில் குடும்பத்தை அழைத்துவருவது சாத்தியமாகத் தோன்றவில்லை. இது என்ன அவ்வளவு பெரிய விஷயமா ? சமாளித்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டார்.

ஆனால், நாங்கள் விடுவதாக இல்லை. கப்பலில் இருந்த தந்தையுடன் தொடர்பு கொண்டோம். சீனாவின் ஷாங்காய் துறைமுகத்தில் இருப்பதாகச் சொன்னார். நாங்கள் விவரத்தைச் சொல்லி ‘உங்கள் மகன் தற்போது ஹாங்காங்கில் உள்ளார் என்றும், போட்டியைப் பற்றிச் சொல்லி, அது நடக்கும் இடத்தையும் சொன்னோம். நீங்கள் தயவு செய்து கௌரவம் பார்க்காமல் உங்கள் மகன் பங்குபெறும் போட்டியைப் பார்க்க விடுமுறை எடுத்துக்கொண்டு செல்லுங்கள்.

குடும்ப வாழ்க்கையில், உங்களுக்குள் புரிந்துணர்வு ஏற்பட்டு, கூடிக்குலாவி மகிழும் நேரம் வந்துவிட்டது! உங்கள் மனைவிக்கு நாங்கள் ‘சிறந்த அன்னை’ என்ற பெருமைக்கு உரிய பட்டத்தை எட்டாம் தேதி வழங்க இருக்கிறோம். நீங்கள் அதிலும் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டினோம்.

உங்கள் மகன் பெறப் போவது வெற்றியோ ? தோல்வியோ ? கவலை இல்லை. அவன் இந்த அளவு தன் கலைத்துறையில் உயர்ந்து வந்திருக்கிறான் என்றால் அது உங்கள் மனைவி எடுத்துக்கொண்ட முயற்சியால்தான். இனி உங்கள் வாழ்வில் வசந்தம்தான் வீசப்போகிறது! என்றெல்லாம் பலவாறு எடுத்துரைத்து, அவரைச் சம்மதிக்க வைத்தோம். ஆனால், நீங்கள் ஹாங்காங் செல்வதையும் சிங்கப்பூர் வருவதையும் யாரிடமும் சொல்லாதீர்கள். எல்லாம் சஸ்பென்ஸாகவே இருக்கட்டும் என்று சொல்லிவைத்துவிட்டோம்.

நாங்கள் போட்ட திட்டம் சாத்தியமானது. எங்கள் அன்புக் கட்டளையை ஏற்றுக்கொண்ட தந்தைக்கு எங்கள் தலைதாழ்ந்த நன்றியை இந்த நேரத்தில் உங்கள்முன் சொல்லியாக வேண்டும்.

ஹாங்காங்கில் நடைபெற்ற நவீன ஓவியப் போட்டிக்குத் தலைப்பாக ‘இயற்கைப் பேரிடரைக்’ கருப்பொருளாகக் கொடுத்திருந்தார்கள். அரங்கிற்குள் அமர்ந்து, அண்மையில் டோங்கா (Tonga) தீவின் கடலில் ஏற்பட்ட எரிமலை, சுனாமியை மனத்தில் வைத்துக் குணா மூன்று மணி நேரத்தில் தீட்டிய ஓவியம் முதல் பரிசுக்குரியதாகத் தேர்வானது என்பது, எங்கள் ரகசியத் திட்டத்திற்கு மேலும் மகுடம் சூட்டியது போலாகிவிட்டது.

இந்த விவரங்கள் அனைத்தும் இப்போதுதான் இந்த சிறந்த அன்னைக்கே தெரியும்.

அம்மா நீங்கள் உணர்ச்சிவசப்படாதீங்க. நீங்கள் இரண்டு மூன்று நாள்களாக உங்கள் மகனின் போட்டியைப் பற்றித் தெரிந்துகொள்ள மிகவும் பதற்றத்துடன் இருந்ததை நாங்கள் அறிவோம்.

கண்களைத் துடைத்துக்கொள்ளுங்கள். யாரப்பா அங்கே ? டிஷ்யூ பேப்பரை எடுத்துக்கொடுங்கள்! அம்மாவைப் பிடித்து இருக்கையில் அமரச் செய்யுங்கள். நான் நீங்களாக இருந்து என்னால் அந்த நெகிழ்வை உணர முடிகிறதம்மா!

ஹாங்காங்கில் என்ன நடந்தது ? முதல் பரிசாகக் குணாவுக்கு 3000 ஈரோவும் சான்றிதழும் கொடுத்தார்கள். உடனே புகழ்பெற்ற இலண்டனின் விளம்பர நிறுவனம் ஒன்று, ‘படிப்பு முடிந்தவுடன் மாதம் 4,000 பவுண்டு தொடக்க ஊதியத்துடன் பணியில் சேர்வதற்கான வேலை நியமன உத்தரவை மேடையில் வழங்கியது.

எங்கள் ரகசியத் திட்டத்தின்படி நேற்றே தந்தையும் மகனும் சிங்கப்பூர் வந்துவிட்டார்கள். நாங்களே எங்கள் கெஸ்ட் ஹவுஸில் தங்க வைத்துக்கொண்டோம். அம்மாவை மேடையில் ஏற்றியபின் அவர்களிருவரையும் இப்போது இந்த விழாவின் கடைசி வரிசையில் அழைத்துவந்து உட்கார வைத்திருக்கிறோம்.

அம்மா! அமைதியா உட்காருங்கள்! எழுந்து எட்டி எட்டிப் பார்க்க வேண்டாம். கொஞ்சம் பொறுமை காத்திடவும். யாராவது அம்மாவைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

இதோ உங்கள் அத்தனை பேரின் கைதட்டல்களோடு தந்தை மகன் இருவரையும் மேடைக்கு அழைக்கிறோம்!..... குணா, தான் பெற்ற பரிசினைத் தாயிடம் கொடுத்து வாழ்த்தைப் பெற்றுக்கொள்வார். இனி நடக்கப்போகும் கண்கொள்ளாக் காட்சியை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்!

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ? என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்’

■ முற்றும்.



# தமிழ் அறிஞர் சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர்...

(18.01.1854 - 23.03.1922)



அ.செல்வபாரதி
ஆய்வியல் நிறைஞர், சென்னை

இலக்கணம், இலக்கியம், உரை, பதிப்பு, அகராதி, மொழிபெயர்ப்பு, ஆசிரியர் பணி, புராணப் படலம், கண்டனங்கள் என்று விரிந்து பரந்த தளத்தில் அரிய பல தமிழ் பணிகளையாற்றி இலங்கையில் ஆங்கிலேயக் குடியேற்ற ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தவர்களில் சிறந்து விளங்கியவர் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர். இவர் இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னாகம் என்னும் ஊரில் அம்பலவாணப் புலவருக்கும் சிதம்பரம் அம்மையாருக்கும் 1854ஆம் ஆண்டு சனவரி மாதம் 18ஆம் நாளன்று மகனாகப் பிறந்தார்.

## இளமைக் கல்வியும் பன்மொழித் திறனும்

புலவர் தமது தந்தையிடம் ஆரம்பக் கல்வி பயின்றார். மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலம் கற்றார். தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பூ. முருகேச பண்டிதர், அ.நாகநாத பண்டிதர் ஆகியோரிடமும் சமசுகிருத மொழியை நாகநாத கனகசபைப் பண்டிதரிடமும் கற்றுத் தேர்ந்தார். சமயநூல்களை நமசிவாயத் தேசிகரிடம் கற்றார்.

தமது பதினாறாவது வயதில் ஆறுமுக நாவலரிடம் இலக்கண, இலக்கியங்களில் தமக்கேற்பட்ட ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார். கனகசபைப் புலவரிடம் இலக்கணம் சம்பந்தமானவற்றைக் கற்றறிந்தார். மேலும் சைவசித்தாந்தச் சாத்திரம் குறித்து இணுவில் நடராசையரிடம் கற்றுத் தெளிவு பெற்றார்.

## இல்லற வாழ்க்கை

புலவர் சின்னாச்சியம்மையாரை 1892ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு விசாலாட்சியம்மையார் (1893–1925) என்னும் ஒரு மகளும் அம்பலவாணர் (1895–1974), முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (1900–1987) என இரு மகன்களும் பிறந்தனர். மகன்கள் இருவரும் தமிழ்க் கல்வியில் பெரிதும் சிறந்து விளங்கி, யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். புலவரின் இளைய மைந்தர் சென்னை லயோலாக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் 1930–1932 காலப்பகுதியில் பணியாற்றியுள்ளார். இருவரும் நூல் பதிப்புத்துறையிலும் தந்தையின் பணி தொடர்ந்தனர்.

## தமிழாசிரியர் பணி

பதிப்புச் செம்மல் சி.வை. தாமோதரம் பிள்ளையால் நிறுவப்பட்ட ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1878ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பின்பு 1884 முதல் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார்.

பின்னர் 1902ஆம் ஆண்டு ஆறுமுக நாவலரால் நிறுவப்பட்ட வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு இருபது ஆண்டுகள் பணிபுரிந்தார். ஆறுமுக நாவலருக்குப் பின் சைவப்பிரகாச வித்தியாசாலையை உயர் கல்வி நிறுவனமாக வளர்த்திடப் பாடுபட்டார். சைவப்பிரகாச சாலையின் ஓர் அங்கமாக நிறுவப்பட்ட காவிய பாடசாலையும் இவரது முயற்சியால் ஒரு மரபுக் கல்வி நிறுவனமாக வளர்ச்சி பெற்றது. அங்குப் பணியாற்றிக் கொண்டிருந்த போது வாதநோயால் பாதிக்கப்பட்டு 1919 ஆம் ஆண்டு பணியிலிருந்து விலகினார்.

இவரிடம் கல்வி கற்ற மாணாக்கர்கள் பலர் பிற்காலத்தில் சிறந்த தமிழறிஞர்களாகப் புகழ்பெற்று விளங்கினர்.

## சுவடிப்பதிப்புப் பணி

திருகோணமலை அகிலேசபிள்ளை, பழைய ஏடுகளைப் பரிசோதித்துக் கையெழுத்துப் பிரதியாகத் தயாரித்த திருக்கரசைப் புராணத்துக்கு அரியதோர் ஆராய்ச்சி உரை எழுதி அளித்தார். அந்நூல் 1893ஆம் ஆண்டு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. திருவாதவூரடிகள் புராணத்தின் மூலத்தைத் திருத்திப் பதிப்பித்த புலவர், பின்னர் அதனை உரையுடன் பதிப்பித்தார். குணசேகரரால் இயற்றப்பட்ட யாப்பருங்கலத்தையும் குணவீர பண்டிதரால் ஆக்கப்பட்ட வெண்பாப் பாட்டியலையும் தாம் எழுதிய பொழிப்புரைகளுடன் 1900ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்.

## எழுத்துப்பணி

குமரகுருபர தேசிகரின் நீதிநெறி விளக்கத்துக்கு உரை எழுதி அந்நூலையும் தண்டியலங்காரத்துக்கு புத்துரை எழுதியும் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய மறைசை அந்தாதிக்கு அரும்பதவுரை எழுதியும் தணிகைப் புராணத்தைத் தமது ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் இணைத்துப் பதிப்பித்தார். மேலும், காங்கேயர் என்பவர் எழுதிய வெண்பா யாப்பிற் பாடப்பட்ட 200 செய்யுள்களைக் கொண்ட உரிச்சொல் நிகண்டின் பன்னிரு தொகுதிகளையும் 1905ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

மாவை இரட்டை மணிமாலை, மாவைப்பதிகம், துணுவைப்பதிகம், ஏழாலை அத்தியடி விநாயகரூஞ்சல், மிலேச்சமத விகற்பக்கும்மி, அமராபதிபூதூர் பாலவிநாயகர்

பதிகம், வதுளைக் கதிரேசர் பதிகம், வதுளை மாணிக்க விநாயகர் பதிகம், வதுளைக் கதிரேசர் சிந்து, துணைவை அரசரடி விநாயகர் பதிகம், துணைவை அரசரடி விநாயகர் ஊஞ்சல், கீரிமலை நகுலேசர் ஊஞ்சல், நகுலேசர் சதகம், இராமோதந்தம், கைலாயப் பிள்ளையார் ஊஞ்சல் முதலிய பல நூல்களையும் இலக்கணச் சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் என்னும் இலக்கண நூல்களையும் கண்ணகி கதை, தமிழ்ப் புலவர் சரிதம், சிவபாலசரிதம், இரகுவம்ச சரிதாமிர்தம் முதலிய உரைநடை நூல்களையும் புலவர் வெளியிட்டு உள்ளார்.

திருக்கரைசைப் புராணப் பொழிப்புரை, சூடாமணி நிகண்டு சொற்பொருள் விளக்கம், தண்டியலங்காரப்புத்துரை, கலைசைச் சிலேடை வெண்பா அரும்பதவுரை, யாப்பருங்கலக் காரிகையுரை என்னும் நூல்களைப் படைத்து அளித்துள்ளார்.

ஏகவிருத்த பாரதம், இராமாயணம், பாகவாதம், இராவணன் சிவதோத்திரம் என்னும் மொழிபெயர்ப்பு நூல்களையும் எழுதி அளித்துள்ளார். மேகதூதக்காரிகை, சாணக்கிய நீதி வெண்பா, இதோபதேசம் முதலிய படைப்புகளைச் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அளித்துள்ளார்.

மேலும் தி.கனகசுந்தரம் பிள்ளையுடன் இணைந்து இராமாயணம் பாலகண்ட அரும்பத உரை எழுதி வெளியிட்டுள்ளார். புலவரது உரைநூல்கள் அவரின் பரந்துபட்ட இலக்கிய ஆர்வத்தையும் ஆராய்ச்சிப் புலமையும் காட்டுவதாக அமைந்துள்ளது. ஆசாரக் கோவை, நான்மணிக்கடிகை, நகுமலைக் குறவஞ்சி நாடகம், உரிச்சொனிகண்டு முதலிய நூல்களைப் பதிப்பு வெளியிட்டுள்ளார். பிரபந்தங்களையும் தனிச்செய்யுள்கள் பலவற்றையும் எழுதி அளித்துள்ளார்.

நன்னூலார் வகுத்துக் கூறிய நட, வா, மடி, சீ முதலிய 23 வினைப்பகுபதங்களுக்கும், பகுதி, விகுதி முதலிய உறுப்புகளைப் பகுத்துக்காட்டி, 'வினைப்பகுபத விளக்கம்' என்னும் நூலினையும் 'இலக்கணச் சந்திரிகை' என்னும் நூலையும் எழுதி அளித்துள்ளார். இவ்விரு நூல்களும் நன்னூல் கற்போருக்குப் பேருதவியாக அமைந்துள்ளனவென அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

'இலக்கியச் சொல்லகராதி' என்னும் பெயரில் 1924ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அகராதி நூலானது, சங்க இலக்கியங்களைக் கற்போருக்குப் பயனுள்ளதாக விளங்குகிறது.

புலவர் அவர்கள் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலினை எழுதி 1916ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அந்நூலில் 182 தமிழ்ப்புலவர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

## இதழாளர் பணி

புலவர் 'செந்தமிழ்', 'தமிழ்ப் பொழில்' முதலிய இதழ்களில் இலக்கிய, இலக்கணம்

தொடர்பான ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார். அக்கட்டுரைகள் அவரது சிறந்த உரைநடையை விளக்குவனாக இருக்கின்றன. உதயத் தாரகை, இலங்கைநேசன், உதயப் பானு, இந்து சாதனம் முதலிய ஈழத்து இதழ்களிலும் செந்தமிழ், சிறீலோகரஞ்சனி, ஞானசாகரம், வைசிய மித்திரன், தமிழ் மகவு முதலிய தமிழ்நாட்டு இதழ்களிலும் இலக்கிய, இலக்கண, சமய, வரலாறு முதலியவைகள் பற்றி ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

## தமிழ்ச் சங்கப் பணி

யாழ்ப்பாணத்தில் 1898ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகவும் 1902ஆம் ஆண்டு முதல் அதன் செயலாளராகவும் அரும் பணியாற்றினார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகிய இரண்டிலும் வித்துவ அங்கத்தினராக விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வுகளுக்குத் தமிழ்மொழி, தமிழ் இலக்கணம் ஆகிய பாடங்களைத் தேர்வு செய்யும் குழுவில் இடம் பெற்றுப் பணியாற்றினார். 1914ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அப்போது தலைவராயிருந்த இராசராசேசுவர சேதுபதி மன்னவரால் பாராட்டப் பெற்றார்.

## இதர பணிகள்

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுள்ள கோயில்களிலும் பாடசாலைகளிலும் சமயம், கல்வி சம்பந்தமாகப் புலவர் ஆற்றிய சொற்பொழிவுகள் பொதுமக்கள் மத்தியில் சமய ஒழுக்கத்தையும் கல்வியறிவையும் வளர்ப்பதற்கு விழிப்புணர்வை உருவாக்கியது.


கண்டனமெழுதுவதிலும் இவர் மிகத்திறமை பெற்றவராக விளங்கினார். ஆறுமுக நாவலர், முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர் ஆகியோரிடம் கண்டனம் எழுதும் கலையைக் கற்றார். இலக்கியம், இலக்கணம், சமயம் முதலிய துறைகளில் தமக்குத் தவறெனப் பட்ட செயல்களைப் புலவர் கண்டிக்கத் தவறியதில்லை.

தனது வாழ்நாள் முழுவதும் தமிழ்ப் பணியாற்றித் தமிழைச் சிறப்பித்த சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர் அவர்கள் உடல்நலக் குறைவால் 23.03.1922 அன்று இவ்வுலகினை விட்டு மறைந்தார். புலவர் இறந்தபோது அவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி மதுரை தமிழ்ச் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், புலவர் இயற்றிய கடைசி நூலாகிய இராமோதந்தம் 1923ஆம் ஆண்டு இச்சங்கத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழறிஞரின் தொண்டினைப் போற்றிடும் வண்ணம் நாமும் நம் தமிழுக்கு நம்மால் இயன்ற தமிழ்ப்பணி செய்வோமாக!

## இலங்கைத் தமிழறிஞர்

# ஆனந்த குமாரசுவாமியும் தமிழும்...



### திரு. ஆனந்த குமாரசுவாமி
(1877 - 1947)

இலங்கையின் கொழும்பில் பிறந்தவர். சிறந்த ஓவியர், சிற்பி, கட்டடக் கலைஞர், ஆராய்ச்சியாளர், நூலாசிரியர் எனப் பன்முகத் திறமைகள் பெற்றவர். ஆங்கிலம், பிரெஞ்சு, பாரசீகம், சிங்களம், சமசுகிருதம், பாலி, இந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த புலமையுடையவர். 'சிலோன் நேசனல் ரிவியூ' என்னும் இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராக விளங்கினார்.

1905ஆம் ஆண்டு விடுதலை உணர்வு உந்துதலால் சமூக சீர்திருத்தச் சங்கத்தை நிறுவினார். 1906ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்றார். அங்கு உரையாற்றும்போது, "நமது கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்பினை உலகில் வேறெங்கும் காணமுடியாது... எம்மவர் விஞ்ஞானக்கல்வியையும் கைத்தொழிற்கல்வியையும் நாடுகின்றனர். இவை அவசியமானவையே! ஆனால் இவை எல்லாம் பண்பாடு என்னும் அடிப்படையிலிருந்து வரவேண்டும்...." என்று குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் இவருக்கு வித்தியா விநோதன் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. 1917இல் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் அமைந்திருந்த நுண்கலை அருங்காட்சியகத்தில் கீழைத்தேயப் பிரிவின் பணிப்பாளராகவும் ஆய்வாளராகவும் பணிபுரிந்தார். 1947ஆம் ஆண்டு அமெரிக்காவில் காலமானார். பன்முக ஆற்றல் பெற்ற ஆனந்த குமாரசுவாமி அவர்களின் பணிகளைப் போற்றுவோம்.

# 'பேர் வாங்கலியோ!'

முனைவர் **சோ.கி.கல்யாணி**
உடுமலைப்பேட்டை



ஆறறிவு பெற்ற மனிதன் தான் காணும் அனைத்துப் பொருள்களுக்கும் பெயர் சூட்டினான். காரணம் பற்றிச் சூட்டிய பெயர்கள் காரணம் இன்றிச் சூட்டிய பெயர்கள் என அவை இரு வகை. அக்கால எழுத்தாளர்கள் புனை பெயர் சூட்டிக் கொள்வது உண்டு. இன்று ரசிகர்கள் தம் தலைவர்களுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் (அடைமொழி) பட்டப்பெயர் வழங்குகின்றனர். தமிழ் மொழிக்குப் பல சிறப்பு இருக்கத் தமிழ் மொழியில் வழங்கும் பெயர்களிலும் சிறப்புகள் உள்ளன. அவற்றை உங்களுடன் பகிர விழைகிறேன்.

தமிழ்ச்செல்வி, தமிழ்மகள், தமிழரசி, தமிழ்ச்செல்வன் என மொழியின் பெயரை முன்னொட்டாக வழங்கும் தனித்தன்மை கொண்ட மொழியில் தற்போது புதுமைப் பித்தர்கள் அதிகமாகி விட்டனர்.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு தமிழ் மக்கள் வடமொழிப் பெயர்களையும் தமிழ்ப்படுத்திய வடமொழிப் பெயர்களையும் பரவலாகச் சூட்டினர். (எ.டு.) அரவிந்த், குமார், சுரேஷ், ரமேஷ் என்பன அரவிந்தன், கமலநாதன் என்றாயின. கிறித்தவச் சமயத்திற்கு மாறிய தமிழர்களின் பெயர்கள் குறித்துத் தனி ஆய்வு நடத்தலாம். தமக்கும் தம் சமூகத்துக்கும் உதவிய ஆங்கிலேயர்கள் நினைவாகத் தமிழர்கள் அவர்களின் பெயரை அப்படியே தம் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்ந்து உள்ளனர் (எ.டு.) பென்னி குயிக். அவ்வாறு கூடக் கூற விரும்பாத பலர் மரியாதை காரணமாக 'துரை' என்று பொதுப் பெயரிட்டு உள்ளனர். இது முன்னொட்டாகவும் பின்னொட்டாகவும் அமைந்து பல்கிப் பெருகியது. காந்திதுரை, ராமதுரை, சாமிதுரை, துரைப்பாண்டி, துரைக்கண்ணு என்பன அவற்றுள் சில.

முகிலன், கபிலன், மாறன் என ஆண்மக்களுக்கும் பாவை, கோதை, பாப்பா, மங்கை என்று பெண் பிள்ளைகளுக்கும் பெயர் சூட்டுவது தற்போது உள்ளது. திராவிடப் பற்றாளர்கள், திராவிடராணி, சுதந்திர முத்து, பேரறிவாளன், மதியழகி, நிலவழகி என்று பெயரிட இராவணன் என்றும் கைகேயி என்றும் பெயர் சூட்டுவோரும் உள்ளனர்.

தொல்காப்பியர் நிலத்தின் அடிப்படையில் மக்களுக்குப் பெயர் சூட்டினார். இன்றும் அவ்வழி சேரன் என்றும் பாண்டியன் என்றும் பாண்டிநாட்டார் 'பாண்டி' என்ற சொல்லை ஆண், பெண் மக்களுக்கு ஏற்ப முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ வைத்துப் பாண்டிமீனா, பாண்டித்துரை என அழைக்கின்றனர். முத்துக்குப் பெயர்போன பாண்டி நாட்டில் முத்துராணி, முத்துராஜா, முத்துதங்கம் என்றும் வைரமுத்து கன்னிமுத்து என்றும் பெயர் இடுகின்றனர். நவமணிகளில் முத்து இருபாலருக்கும் பொதுவாக இருக்க வைரம், பவளம் என்பவை பெண்பாலருக்கே இடும் பெயராக உள்ளன. மீனாட்சி என்பது மீன்+ஆட்சி எனத் தமிழும் வடமொழியும் கலந்த பெயராக உள்ளது இவ்வகையில் 'சொக்கனாட்சி' என்பது சொக்கு+ஆட்சி எனப் பிரிந்து சொக்கவைக்கும்

கண்களை உடையவள் எனப் பொருள்தரும் பெயராக உள்ளது.

உயர்திணைக்கு அஃறிணைப் பெயரையும் அஃறிணைக்கு உயர்திணைப் பெயரையும் சூட்டுதல் பரவலாகி வருகிறது. சூரிய, சந்திர, பூமி, நட்சத்திரங்களின் பெயரைத் தன் குழந்தைகளுக்குச் சூரியா, சந்திரா, பூமிகா கார்த்திகா, விசாகன் எனச் சூட்டுகின்றனர். இதில் சூர்யா என்பது இருபாலருக்கும் பொதுப் பெயராக உள்ளது. மேலும் நட்சத்திரம், பொன்மொழி சரிகமபதநி, கன்னல், மின்னல் என்றும் பெயரிட்டுள்ளனர். 'மணி' என்ற பின்னொட்டுடன் முடியும் வைரமணி, தங்கமணி, ஜோதிமணி, சிந்தாமணி என்ற பெயர்கள் இருபாலருக்கும் பொதுவாக வழங்குகின்றன. 'பொன்முடி' என்பது சங்ககால ஆண்பாற் புலவர் பெயர். இக்காலத்தில் இப்பெயரில் ஆண்கள் இருக்க, இப்பெயர் கொண்ட பெண்களும் உள்ளது வியப்பு.

மரியாதை நிமித்தம் செட்டி நாட்டார் பெரியோர் தம் பெயரை 'கானா சூனா' என்றும் 'சூனா ரானா' என்றும் குறிப்பிடுவது உண்டு. இவ்வழக்கு திரிந்து தற்போது அபிநந்தன், அபிநயா என்ற பெயர் உள்ளவர்களை 'அபி' என்று சுருக்கி அழைக்கின்றனர். இதனாலும் குழப்பம் ஏற்படுகிறது. 'லோக நாயகி' என்ற வடமொழிப் பெயரைத் தமிழறிஞர் தம் மகளுக்கு 'உலகி' எனச் சுருக்கி வைத்துள்ளார்.

புனிதத்தலம், நதி, நூல், கடவுள் பெயர்களைத் தன் மக்களுக்குச் சூட்டித் தம் நன்றியவை புலப்படுத்தியும் வந்துள்ளனர். காசி, பழனி, திருப்பதி என்ற வரிசையில் தற்போது ரஷ்யா, மாஸ்கோ, அயோத்தி என்ற பெயர்களைக் காண முடிகிறது. திருவாசகம், திருப்புகழ், மணிமேகலை, பாவை என்பன புனித நூல் பெயராக அமைய ராமஜெயம், நமச்சிவாயம் என்பன மந்திரப் பெயர்களாக உள்ளன.

அன்பு, பக்தி, அருள் என்பன மனிதனுக்கே இருக்க வேண்டிய உயர்ந்த உணர்வுகள். இவற்றைச் சிறப்பிக்கத் தமிழர் சிலர் தம் குழந்தைகளுக்கு இறையன்பு, அருள்மொழி, அருட்புனல், அறிவொளி, இன்சுவை எனப் பெயரிட்டுள்ளனர். 'தமிழிசை' என்பது ஒரு பெண் மருத்துவரின் பெயர். குணத்தொகை யான் என்பது தமிழறிஞர் தம் மகனுக்குச் சூட்டிய பெயர். 'பகுத்தறிவு' எனத் தன் குழந்தைக்குப் பெயர் சூட்டியவர் பெரியாரின் பாசறையைச் சேர்ந்தவர் எனக் கூற வேண்டுமோ?

'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறும் காலமிது. எனினும் சில குறிப்பிட்ட பெயர் சொற்களுக்கு இணையான பெண்பால் பெயர்ச்சொற்கள் இல்லை. சிறுவன் என்று பொருள்படும் 'பயல்' (பையன்) என்பதற்கும் வீரன், நாதன் என்பதற்கும் இணையான பெண்பாற்பெயர்கள் இல்லை. கன்னி, விதவை, வாயாடி, நர்ஸ் எனப்படும் செவிலி என்பவற்றிற்கு இணையான ஆண்பாற் சொற்கள் இல்லாமை தமிழின் தனித்துவத்தைக் காட்டுகிறது.

நாறும்பூநாதன், செங்கல்வராயன், சொல்விளங்கும் பெருமாள், வண்டார்குழலி, பெருந்தேவி தாயார், தீப்பாய்ந்தாள் போன்ற பெயர்களைத் தற்போது தம் மக்களுக்கு யாரும் சூட்டுதல் இல்லை. 'நாயே! பீட்டர்க்குச் சாப்பாடு வை' என்ற தொடரில் அஃறிணைச் சொல்லான நாய் என்பது வேலையாளையும் பீட்டர் என்பது அஃறிணை நாயையும் குறிப்பதுதான் இன்றைய நிலையாக உள்ளது. மனிதன் இவ்வாறு பேர் வாங்கும் நிலை என்று மாறும்?■

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வேறெங்கும் இல்லாத வசதிகளுடன்
## மதுரையில்...

நகரின் மையப் பகுதியில்...
குறைந்த வாடகையில்...
நிறைந்த வசதிகளுடன்...
அரங்குகள் வாடகைக்கு....

கலையரங்கம்





கூட்ட அரங்கம்






### சிறப்பம்சங்கள்

- 400 பேர் அமரும் கலையரங்கம் ...
- 200 பேர் அமரும் இரண்டு கூட்டஅரங்கம்...
- 300க்கும் மேற்பட்டோர் உணவருந்தும் திறந்தவெளி உணவுக்கூடம்
- கண்காட்சி மற்றும் கடைகள் அமைப்பதற்கான விசாலமான இடவசதி
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- தூய்மையான கழிப்பறை
- பிரம்மாண்டமான மேடை அமைப்பு
- மின்காட்சி வெளியிடும் வசதி
- 24மணி நேர மின்சாரம்
- விசாலமான வாகனம் நிறுத்தம்
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளுக்கு...
- அரசு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் விழாக்களுக்கு...
- சமயச் சார்பற்ற நூல்கள் வெளியிட...
- பண்பாடு, கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்வுகளுக்கு...

**பதிவுசெய்ய அணுகவும்...**

**உங்கள் நிகழ்வுகள்
நீங்காத நினைவுகளாக
வாழ்வில் நிலைத்திருக்க...
உடனே முன்பதிவு செய்யுங்கள்...**

**தொடர்புக்கு...**

0452–2530766/2530799
utsmdu2@gmail.com

முன்பதிவிற்கு
உடனே அணுகவும்

Uts Mdu @TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




## படைப்புகள் வரவேற்பு...

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின் சார்பில் திங்கள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் உலகத்தமிழ் மின் ஆய்விதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் தங்களின் சொந்தப் படைப்பாகவும் இதுவரை வெளியிடப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : utsmdu2@gmail.com (குறிப்பு: ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்படும் படைப்புகள் மட்டுமே இதழில் வெளியிடப்படும். படைப்புகளைத் திருத்தியமைக்க ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு).

நன்றி!

– ஆசிரியர்



# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வெளியீடுகள்




<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக் கல்லூரி அருகில்,
மதுரை – 625020.

தொலைபேசி எண்:
0452 – 2530799
மின்னஞ்சல் முகவரி :
utsmdu.research@gmail.com